Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




நியாயமான விலையில் தரமான கணனிகளையும்
கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Pc Paradise

இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)

TP No. 0777-271220

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 16 (21.12.2002) சனிக்கிழமை இதழ் : 81

# நோர்வேயின் தூதுவரை நாடுகடத்தக் கோரிக்கை!

## ஜே.வி.பி. விமல் வீரவன்ஸ காரசார விமர்சனம்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்துவரும் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கை நாடு கடத்த வேண்டுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், நோர்வே அரசாங்கத்தை காரசாரமாக விமர்சித்தார்.**



ஆறாம் ஜோன் மன்னன் போன்று, ஜோன் வெஸ்ட்பேர்க் இலங்கையின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும் புறக்கணித்து, சர்வாதிகாரப் போக்கில் எமது மக்களை வழி நடத்தப் பார்க்கின்றார் என்றும், விமல் வீரவன்ஸ தெரிவித்தார். நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு சமஷ்டி ஆட்சி முறையை நோர்வே அரசாங்கம் முன்வைத்திருக்கின்றது என்று குற்றஞ்சாட்டிய விமல் வீரவன்ஸ, அவ்வாறு நாடு பிரிவதற்கான ஏற்பாட்டிற்கு இலங்கை அரசாங்கமும் துணைபோகின்றது என்றும் கூறினார். நோர்வேயின் கள்ளத்தனமான நடைமுறையையும் அதற்கு பக்கம் பாடும் இலங்கை அரசாங்கத்தின் போக்கையும் கண்டிப்பதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் நாடுதழுவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (200,01)

## தமிழகத்திலிருந்து 17 இலங்கையர் மன்னார் திரும்பினர்

(மன்னார்)

தலைமன்னாரின் மேற்குப் பகுதியில் உள்ள உறுமலைப் பகுதிக்கு நேற்று மதியம் 17 இலங்கையர் படகில் வந்திறங்கியுள்ளனர். இவர்கள் இந்தியாவிலிருந்து திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீன்பிடி இழுவைப் படகு ஒன்றிற்கு மூவாயிரம் ரூபாவைச் செலுத்தி, தாம் இலங்கை வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் மக்கள்மீது பொலிஸார் திடீர் தாக்கு!

### ஒருவர் படுகாயம்; பதாதைகள் அறுத்தெறிவு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நேற்று பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மூண்ட மோதலில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்தார். வேறு சிலர் அடி காயங்களுக்குள்ளாகினர். இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் பொலிஸார் தமது இரண்டு சக்கர உழவு இயந்திரத்தில், முகாம் பகுதியிலிருந்து வந்தபோது மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள், அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதத்தினையடுத்து, அப்பகுதிக்கு மேலதிகமாக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். அங்கு வந்த பொலிஸாரும் கடற்படையினரும் மக்கள்மீது குண்டாந்தடிகளாலும், துப்பாக்கிப் பிடிகளினாலும் தாக்கத் தொடங்கினர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வானொலிக் கருவிகள்; ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்!

### சரத் அமுனுகம கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு, அரசாங்கம் வானொலிக் கருவிகளை வெளிநாட்டில் இருந்து தருவித்து, நோர்வேயின் உதவியுடன் வன்னிக்கு எடுத்துச்சென்று வழங்கியமை தொடர்பாக, ஜனாதிபதி தகவல்களை திரட்டி வருகின்றார். விரைவில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொ.ஐ.முவின் ஊடகத் துறைப்பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் வன்னியில் நடாத்தி வரும் புலிகளின் குரல் வானொலி சட்டவிரோதமானது என்றும் தெரிவித்தார். அவ்வாறு சட்டரீதியற்ற வானொலிக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச்சட்டம் அமைதிக்கு உதவமாட்டாது!

### உயர்நீதிமன்ற நீதிபதி விக்னேஸ்வரன்

(நமது நிருபர்)

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால விதிகள் போன்றன அமைதிச்சூழல் உருவாவதற்கு உதவமாட்டாதெனவும், இச் சட்டங்கள் மனித உரிமைகளைக் காக்கும் சர்வதேசக் காப்புரிமைகளிலிருந்து விலகிச் செல்பவை என்றும் உயர் நீதிமன்ற நீதிபதி சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை இந்து கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரை நிகழ்த்தும்போது -

வடக்கு கிழக்கில் வாழும் மக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவரை கண்டித்து பிக்குகள் மகஜர் கையளிப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வானொலி உபகரணங்களைக் கொண்டுசெல்ல உதவிய நோர்வே தூதரகத்தைக் கண்டிக்கும் மகஜரொன்றை - பிக்குமார் முன்னணி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கையளிக்கவுள்ளது.

ஏற்கனவே தமிழர் விரோதப் போக்கில் - பல ஆர்ப்பாட்டங்ககளையும் பேரணிகளையும் நடாத்தியிருக்கும் பிக்குமார் முன்னணி, இம் மகஜரை நாளைமறுதினம் - ஜனாதிபதியை நேரில் சந்தித்து கையளிக்கவுள்ளது.

பிக்குமார் முன்னணியின் தலைவரான - வெல்லாபிட்டி தர்மகீர்த்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அமைதிக்கு ஒரு கரை காணுறது எண்டுதான் ஜே.வி.பிக்காரர் நிக்கினம்...

## கிழக்கு பிராந்திய அபிவிருத்தி பல்கலைக்கழகத்தில் மாநாடு!



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண அபிவிருத்தி குறித்த உயர்மட்ட மாநாடொன்று நேற்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. நேற்று மாலைவரை நடைபெற்ற இம்மாநாட்டில் - கிழக்கு மாகாணம் குறித்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் தொடர்பாக மிக விரிவாக ஆராயப்பட்டது.

இம்மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வுத் திட்ட சர்வதேச இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் தூயவன், தமிழீழ மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், மகளிர் அரசியல் பொறுப்பாளர் பானுகா, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ம.செ.மூக்கையா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், திட்ட இணைப்பாளர்கள், பொறியியலாளர்கள், எனப் பொருந்தொகையானோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

## மீள்குடியேற்றலுக்கான பகுதி; படைத்தரப்பு அறிவிப்பு இன்று?

### தீர்க்கமான முடிவு இன்னும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் புதிய மீள் குடியமர்வுக்கான பிரதேசமொன்றை படைத்தரப்பு இன்று பிரகடனம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி மீள்குடியேற்றப் பிரதேசத்தை பிரகடனம் செய்வது குறித்து, யாழ்.இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்தில் பல்வேறு கோணங்களில் ஆராய்வுகளும் கருத்துப் பரிமாற்றங்களும் இந்தவாரம் இடம்பெற்றன. இவ்விடயம் குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவதில் படை அதிகாரிகளிடையே குழப்பமான நிலை நிலவிவருவதாகத் தெரியவருகின்றது.

கடந்த புதன்கிழமை பலாலிப் படைத்தளத்துக்கு வருகைதந்த இராணுவத் தளபதியும், கடற்படைத் தளபதியும் - இவ்விடயம் குறித்தும் யாழ் இராணுவத் தளபதியுடன் கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த பதினான்காம் திகதி முக

(10 ஆம் பக்கம் பார்க்க)

# குறைந்த, நடுத்தர வருமானமுடையோருக்கு ஜனவரி முதல் வீடமைப்புத்திட்ட வசதிகள்!

(கொழும்பு)

வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

3 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரை வருமானம் பெறும் குடும்பங்களுக்கே இந்த வீடமைப்புத் திட்டத்தின் மூலம் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும். 10.5 சதவீத வட்டியும் 15 வருடங்களில் திருப்பிச் செலுததத்தக்க வகையிலும் இக் கடன் வசதி வழங்கப்படும்.

10 ஆயிரம் வீடுகளை அமைக்கும் வகையில் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. இந்த வீடமைப்புத் திட்டங்கள் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படும். இதற்குத் தேவைப்படும் மேலதிக நிதியுதவிகளை வர்த்தக வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் திறைசேரி வழங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அதிபர் நியமனம்

நெல்லியடி மெதடிஸ்ட் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு புதிய அதிபராக க.நடராஜலிங்கம் இம்மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார். ஏற்கனவே இப்பாடசாலையில் அதிபராக இருந்த வ.கணேசமூர்த்தி, தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளையார் மகா வித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ளமையால் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.(116)

# புன்னாலைக்கட்டுவனில் காவலரண்கள் புனரமைப்பு

வடக்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் உள்ள காவலரண்கள் மற்றும் சோதனைச் சாவடிகள், பதுங்கு குழிகள் என்பனவற்றைப் புனரமைத்து, படைத்தரப்பினர் பலப்படுத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் முதல், புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதி மக்கள, வடக்குப் பக்கமான பிரதான வீதி (பலாலி வீதி) ஊடாகப் பயணம் செய்வதை படைத்தரப்பு தடுத்திருந்தது.

தற்போது- கோயில் மற்றும் வீடுகள் புனரமைக்கவோ அல்லது புதிய வீடுகளை நிர்மாணிக்கவோ படையினர் தடைசெய்துள்ளனர். அத்துடன் - புதிதாக விவசாய நிலங் களை திருத்தம் செய்யவோ அல்லது புதிதாக பயிர் செய்கை மேற்கொள்ளவோ படையினர் தடை விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கலை நிகழ்ச்சி

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயம், தனது நூற்றாண்டு நிறைவையொட்டி, நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கும் 2.30 மணிக்கும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது. பாடசாலை அபிவிருத்தி நிதிக்காக இந்நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# 175 இலங்கையர் விரைவில் லெபனானிலிருந்து நாடு கடத்தல்!

(பெய்ரூட்)

லெபனான் நாட்டில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 175 இலங்கையர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப படவுள்ளனர்.

லெபனானின் சிறைகளில் 175 இலங்கையர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை அடுத்த மாதம் இறுதிக்குள் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள 175 பேரில் 150 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாள் இனிய நாள்

**21-12-2002 - சனிக்கிழமை**

**சித்திரபானு ஸ்ரீ, மார்கழி மீ, - 6ஆம் திகதி**

*திதி* :- துதியை - நள்ளிரவு - 1.23 வரை, அதன்மேல் திருதியை

*நட்சத்திரம்* :- திருவாதிரை -காலை - 7.40வரை அதன் மேல் புநர்பூசம். உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம்.

**மேடம்** :- பணவரவு, தொழிற்சித்தி, சகோதரர் உறவு, தெய்வ வழிபாடு,வியாபாரநிலை சமம், கல்வி முன்னேற்றம்.

**இடபம்** :- வரவுக்குமிஞ்சியசெலவு, வாக்குவாதம், மனச்சஞ்சலம், தெய்வவழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை சமம்.

**மிதுனம்** :- மனமகிழ்ச்சி, நண்பர்கள் வரவு, விருந்துபசாரம், தெய்வீகச் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- வண் செலவு, காரியங்களில் தடை, உடல்நலக் குறைவு, வீட்டில் வம்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- செய்தொழில் லாபம், பெண்களால் மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, சமய அறிஞர் உறவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கன்னி** :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழில்சிறப்பு, சமூக சேவையில் மதிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபார முன்னேற்றம். .

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- பிதாவுடன் மனஸ்தாபம், வைத்தியச்செலவு, தெய்வவழிபாடு, எதிரி தொல்லை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- வீண்மனஸ்தாபம், புதிய தொழில் முயற்சியில் ஈடுபடுவது நன்றல்ல, தூரப்பயணம் தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- மகிழ்ச்சி, ஆபரண சேர்க்கை, கௌரவம், மரியாதை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- பொது சேவையில் பங்கு, வைத்தியச்செலவு, உடனலக் குறைவு, மனஸ்தாபம்,கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்,

**மீனம்** :- மாதா சுகயீனம், பெண்கள் சுகயீனம், வைத்தியச் செலவு, வாகனச்செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

# செஞ்சிலுவை செயற்பாடுகள் இலங்கையில் குறைக்கப்படும்!

## உயர் பிரதிநிதி அறிவிப்பு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கையில் தனது செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்ள ஆரம்பித்திருப்பதாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் மட்டப்பிரதிநிதி றெட்டோ மீஸ்டர் தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் வைத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், 1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணாமல் போன 10 ஆயிரம் பேர் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது.

தற்போது அரசியல் தீர்வு சாத்தியமாகும் நிலை தோன்றியிருக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர். இனி இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் குறைக்கப் படும்.

இனிவரும் காலங்களில் இறந்துள்ளோர், காணாமற் போனோர் குறித்தே அதிகம் கவனம் செலுத்தப்படும். இப்பிரச்சினை தீர்க்கப் படும்வரை இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கம் செயற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# எட்டு வயது சிறுமியை காணவில்லை எனப்புகார்

புங்குடுதீவைச் சேர்ந்த எட்டு வயது சிறுமி ஒருவரைக் காணவில்லையென, நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்தனா சுவேந்திரன் என்ற எட்டு வயதுச் சிறுமியையே காணவில்லையென, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் சிறுமியின் பெற்றோர்களால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சிறுமி புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலய மாணவி எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாட்டுத் தொழிலாளர்களை ஜேர்மனி ஏற்காது

(பொன்)

தொழிற்திறன் வாய்ந்த வெளிநாட்டவர்களுக்கு ஜேர்மனியில் வேலைவாய்ப்பை வழங்கும் வசதிகளைக் கொடுத்த, ஜேர்மனியின் சர்ச்சைக்குரிய குடிவரவுச்சட்டம் அந்நாட்டு உயர் நீதிமன்றினால் தடைசெய்யபபட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் ஜேர்மன் நாடாளுமன்றில் சட்டவிரோதமாகவே அங்கீகரிக்கப்பட்டதாக, உயர் நீதிமன்றில் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்த நீதிபதிகள் இத்தகைய உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

தொழிற்திறன் வாய்ந்தவர்களின் பற்றாக்குறையினால், வெளிநாடுகளிலிருந்து இத்தகையவர்களை வரவழைக்க இச்சட்டமூலம் நடாடாளுமன்றினால் கொண்டுவரப் பட்டது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் முஸ்லிம் ஆயுதக்குழு தவறான தகவல் என அறிவிப்பு

## தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகம்

(கொழும்பு)

கிழக்கில் முஸ்லிம் ஆயுதக்குழு ஒன்று இயங்குவதாக தென்பகுதி செய்தி ஊடகங்களில் வந்த தகவல்கள் தவறானவை என தென்கிழக்கு பல்கலைக்கழகச் சமூகம் அறிவித்துள்ளது.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தென்பகுதி ஊடகங்கள் தெளிவாகப் பார்ப்பதில்லை எனவும் இவ்வமைப்பு கண்டித்துள்ளது.


## சிறு விளம்பரம்

**கடை வாடைக்கு**

பருத்தித்துறை பிரதான வீதியில் கடைத்தளபாடங்களுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-

**ராஜா சுவைச்சோலை,**
பருத்தித்துறை.
(பஸ் டிப்போ முன்பாக)
(சி-338)

**நிறஞ்சனாஸ் சங்கானை**
HARRISON FORD நடித்த
**AIR FORCE - ONE**
காட்சிகள்:
11.00, 2.45, 6.00 7.45 (பு.நே)
20 முதல்
தாயின் மணிக்கொடி
(சி-287)

**ராஜா**
யாழ்ப்பாணம்.

22 ஆம் திகதி வரை
**வில்லன** 51 ஆவது நாள்
10.30, 2.30, 6.30
23 முதல் M.G.R ன் சிரார்த்த தினத்தை முன்னிட்டு M.G.R., ராதா சலூஜா நடித்த இதயக்கனி
(சி-262)






யாழ்.நகரில் தரமான சைவ உணவு வகைகளுக்கு....

**ஸ்ரீ கேதபவன்**

**(விஷ்ணு விஹார்)**

சுவையோ சுவை



வாருங்கள் வந்து சுவைத்து மகிழுங்கள்

163, மின்சார நிலைய வீதி,

(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

# இலங்கையின் பாதுகாப்பு நிலைமை அறிக்கை இந்திய அரசாங்கத்துக்கும்!

## ஜெனரல் நம்பியார் குழு சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

இலங்கையின் வட - கிழக்குப் பகுதிகளில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராயவந்துள்ள ஜெனரல் நம்பியார் தலைமையிலான மூன்று உறுப்பினர் கொண்ட இந்திய இராணுவ அதிகாரிகள் குழுவினர், தமது அறிக்கையை இந்திய அரசாங்கத்துககும் சமர்பிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்வார முற்பகுதியில், கொழுமபு வந்த ஜெனரல் நம்பியார் தலைமையிலான உயர்மட்ட இந்திய இராணுவ அதிகாரிகள் குழு - தற்போது, பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்து, பாதுகாப்பு நிலைமை குறித்து மதிப்பீடுகளைச் செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இந்தக் குழுவின் பயணங்கள் மற்றும், தங்குமிடங்கள் தொடர்பான தகவல்கள் முற்றிலும் இரகசியமாகப் பேணப்பட்டுவருகின்றன.

இந்திய அதிகாரிகளின் விஜயம் குறித்தும், அவர்களின் பயணங்கள் குறித்தும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் உரிய பதிலை வழங்காமல் மழுப்பி வருகின்றனர். முற்றிலும் இரகசியமாகப் பேணப்படும் இந்திய அதிகாரிகளின் விஜயம் குறித்து கொழும்பில் பல்வேறு ஊகங்கள் கிளம்பியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் நம்பியார் தலைமையிலான இந்தியப் படையதிகாரிகளின் இலங்கை விஜயம் குறித்த தகவல்களைப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மறைப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துவதாக சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, ஜெனரல் நம்பியார் தலைமையிலான படையதிகாரிகள் குழு - இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு புதுடெல்கி திரும்பியதும், இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை இந்திய அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கும் என்றும் தெரியவந்துள்ளது.

### விவசாயப் பிரச்சினைகளை எழுதியனுப்பலாம்

(சரசாலை)

விவசாயிகள் பயிர்ச்செய்கையின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, தபால் மூலம் தமக்கு எழுதியனுப்புமாறு பேராதனை விவசாயத் திணைக்களம் கேட்டுள்ளது. விவசாயப் பிரச்சினை, விரிவாக்கல் பயிற்சிப்பிரிவு, விவசாயத் திணைக்களம், தபாற்பெட்டி எண் - 18, பேராதனை என்ற முகவரிக்கு எழுதியனுப்பி பிரச்சினைகளுக்கு தீர்வுகாணலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (34)

### தாவடியில் அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இன்றைய அரசியல் நிலையும் அபிவிருத்தியும் என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை ஞாயிறு பி.ப. 4 மணிக்கு, தாவடி மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

## கருணாநிதி முதலில் ஒப்பமிட்டது மகிழ்ச்சி என்று வைகோ தெரிவிப்பு

(சென்னை)

தமிழக அரசினது அராஜகப் போக்கைக் கண்டித்தும், 'பொடா' சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வைகோவை விடுவிக்கக் கோரியும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் திரட்டிவரும் - ஒரு கோடி கையெழுத்து மகஜரில், முதலாவதாக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி ஒப்பமிட்டமை தமக்கு மகிழ்ச்சியப்பதாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

'பொடா' சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட் டுள்ள வைகோ, நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டபோது இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட வைகோவுக்குத் தொடர்ந்தும் தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இவரை, இம்மாதம் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்திருக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் பிரதமர் ரத்னசிறி எங்கே? குடும்பத்தினருக்கே தெரியவில்லை!



(கொழும்பு)

இலங்கை இறப்பர் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக விசாரணைக்கு அழைக்கப்பட்ட, முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலைமறைவாகி விட்டதாகக் குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புளத்சிங்கள என்ற இடத்தில், இறப்பர் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காகத் திறைசேரியால் வழங்கப்பட்ட 90 கோடி ரூபாவில் 69 கோடி ரூபா ஊழல், மோசடி இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டிருக்கின்றது.

இதையடுத்து, விசாரணைகளை ஆரம்பித்த குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர். அக்காலத்தில், மேற்படி கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவையும் நீதிமன்றத்தில் ஆஜராகக் கேட்கப்பட்டிருந்தது.

ஆனால், அவர் நீதிமன்றில் சாட்சியமளிக்க வரவில்லை. இது குறிததுக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார், ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் குடும்பத்தினரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது, அவரைப் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது எனக் கூறியுள்ளனர்.

இதனால், முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலைமறைவாகியிருக்கலாம் எனக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். அத்துடன், இவர் சாட்சியமளிக்காத பட்சத்தில் விசாரணைகள் முடக்கமடையக்கூடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சமஷ்டித் தீர்வு குறித்து சந்தேகம் சு.க. மத்திய குழுவில் ஆராய்வு!

(கொழும்பு)

தற்போதைய சமாதான முயற்சிகளின் போக்குக் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் கடந்த புதன்கிழமை சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், தற்போதைய சமாதான முயற்சிகளின் போக்குக் குறிதது மத்தியகுழு உறுப்பினர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததாகத் தெரியவருகின்றது.

குறிப்பாக, அரசாங்கம் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்திற்கோ, ஜனாதிபதிக்கோ தெரியப்படுத்தப்படுவதில்லை எனக் குற்றஞ்சாட்டியதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவும் இந்த விடயம் தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை என சககட்சி உறுப்பினர்களிடம் கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் சமஷ்டித் தீர்வு தொடர்பாக - அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் சந்தேகமளிப்பதாகவும், இந்த விடயம் தொடர்பாக விரிவான தகவல்களை அரசிடம் கோருவதெனவும் சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

## இலங்கையில் எயிட்ஸ் ஆபத்து; தடுப்பதற்கு உலகவங்கி நிதியுதவி!

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோய் வேகமாகப் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதால் - இதனைத் தடுப்பதற்காக உலக வங்கி நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

தேசிய அளவிலான எயிட்ஸ் எதிர்ப்புப் பிரசாரங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இந்நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இதற்காக - உலக வங்கி 12.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை (சுமார் 120 கோடி ரூபா) இலங்கைக்கு வழங்கும். 'தேசிய எயிட்ஸ் பாதுகாப்புத் திட்டம்' என்ற பெயரில் அரசாங்கத்துடன் இணைநது உலகவங்கி, இந்த எயிட்ஸ் பரவல் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

எயிட்ஸ் நோயைப் பரவாமல் தடுப்பது மற்றும் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஆகியனவற்றுடன், எயிட்ஸ் நோய்ப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சிகிச்சைகளை வழங்குதல் ஆகியவற்றுக்கும் இந்நிதி செலவிடப்படும்.

1986ஆம் ஆண்டில் இலங்கையில் 415 பேர் மட்டும் எச்.ஐ.வி கிருமியின் தாக்கத்துக்குள்ளாகியிருந்தனர். இத்தொகை கடந்த 2001 ஆம் ஆண்டில் 4800 ஆக அதிகரித்துள்ளதென்றும் வொஷிங்டனில் வெளியிடப்பட்ட உலகவங்கிச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் 42 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோய்ப் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர். தினமும் 16 ஆயிரம் புதிய எயிட்ஸ் நோயாளிகள் உருவாகி வருவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டள்ளது.

## இந்தியச் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவது அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் இந்தியச் சுற்றுலாப் பயணிகளின் தொகை அதிகரித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொகை அதிகரித்துள்ளது. இந்தியாவிலிருந்து மட்டும் கடந்த ஜனவரி முதல் ஒக்ரோபர் வரை 5 இலட்சத்து 75 ஆயிரத்து 579 சுற்றுலாப்பயணிகள் இலங்கை வந்துள்ளனர். இது கடந்த வருடத்தை விட 108 சதவீதம் அதிகமாகும்.

இதைவிட மியான்மார், திபெத், நேபாளம், பூட்டான், சீனா, தாய்வான், தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

### மீண்டும் இயங்கும் சனசமூக நிலையம்

(சரசாலை)

மீசாலை - சிறிமுருகன் சனசமூக நிலையம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

அல்லாரை வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள இச்சனசமூக நிலையம், யுத்த அனர்த்தங்களால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இயங்காதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (34)




அண்மையில் பருத்தித்துறைப் பிரதேசசெயலகத்தில் சர்வதேச ஊனமுற்றோர் தினத்தில் நடாத்தப்பட்ட நிகழ்வில், ஊனமுற்ற மூவருக்கு முச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. அதில் ஒருவருக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி முச்சக்கர வண்டி ஒன்றை வழங்குவதையும், அருகில் சமூக சேவை உத்தியோகத்தர் என். இராசலிங்கம், துன்னாலை வடக்கு கிராம அலுவலர் எஸ்.சிவராசா ஆகியோர் உள்ளதையும் படத்தில் காணலாம். (15)

## பிரமுக வங்கியை மூடிவிட மத்திய வங்கி உத்தரவு!

(கொழும்பு)

பிரமுக அபிவிருத்தி, சேமிப்பு வங்கியை மூடிவிடுவதற்கு இலங்கை மத்தியவங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. பிரமுக வங்கியை மூடும் உத்தரவு நேற்றுமுன்தினம் நள்ளிரவு இலங்கை மத்தியவங்கியினால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

வங்கியின் செயற்பாடுகள், மத்திய வங்கியின் சட்ட நடைமுறைகளுக்கு முரணாக இருப்பதாகக் கூறியே பிரமுக வங்கியை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் பிரமுக வங்கியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பாக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத்துறை, லஞ்ச ஊழல் ஆணைக்குழு, தொழில்த் திணைக்களம் ஆகியவற்றிடம் ஒப்படைக்கவும் இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், மத்திய வங்கியால் மூடுவதற்கு உத்தரவிடப்பட்ட முதலாவது வங்கியாக பிரமுக வங்கி இடம்பிடித்துள்ளது.



உங்களில் அசாதாரண அறிகுறிகள் காணப்படின் அலட்சியப்படுத்தாது, விரைவாக உரிய வைத்தியரின் ஆலோசனைப்படி பூரணச் சிகிச்சை பெறுங்கள்.

- தமிழீழ சுகாதார சேவை.

# மக்கள் வேண்டுவது நிம்மதியே; அதுவே சமாதானத்தை வலுவாக்கும்!

## வலி - வடக்கு ஒன்றியக் கூட்டத்தில் இளம்பரிதி

(வலி.வடக்கு)

"விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை- எமது மக்களின் கௌரவமான, பாதுகாப்பான, சுதந்திரமான வாழ்க்கைக்கு வழி சமைப்பதற்காகவே நாம் போராடுகின்றோம். அதுதான் எமது உயர்ந்த குறிக்கோளாக விளங்குகிறது. இன்றில்லாவிட்டாலும் எமது வருங்கால சந்ததிக்கு நல்லதோர் வாழ்வு உண்டு என்பது எமது அசையாத நம்பிக்கையாகும்."



இவ்வாறு, விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுபபாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்க மணடபததுல, வலி. வடககு பொது ஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குகொண்ட கலந்துரையாடல நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், "நமது ஈழநாடு" நிர்வாகப் பணிப்பாளருமான எஸ்.சிவமகாராஜா தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இளம்பரிதி இங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"விடுதலைப்புலிகள் அமைப்பு - போட்டி அரசியல் அமைப்பு அல்ல. எமது மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஓர் இயக்கம். நான் ஒரு அதிகாரியாகவோ, அரசியல்வாதியாகவோ இங்கு வரவில்லை. ஓர் போராளியாகவே வந்திருக்கின்றேன்.

வலி.வடக்கு மக்கள் நீண்ட காலமாக அனுபவித்துவரும் கஷ்டங்களை நாம் உணர்கின்றோம். இராணுவ நடவடிக்கைகளாலும், பொருளாதார பாதிப்புக்களாலும் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பிடம், தொழில் ஆகிய அடிப்படைப் பிரச்சினைகளால் அவர்கள் படும் கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

மக்களின் துன்பங்களை உணாந்துதான், நாம் இயல்பு வாழ்க்கை தொடர்பான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகிறோம். மக்களுக்கு நிம்மதி வேண்டும். அப்போதுதான் சமாதானம் வலுப்பெற முடியும். கடந்த முறை நடந்த மீள்குடியமர்வு தொடர்பான பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்திலும் மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்து நாம் மிகவும் வலியுறுத்தியுள்ளோம். மக்கள் மீளக்குடியமர - பாதுகாப்பு, அச்சம், சந்தேகம், தந்திரோபாயம் என்றெல்லாம் இராணுவத் தரப்புக் காரணம்கூறி இழுத்தடித்து வருகிறது. இருந்தபோதும் - இது விடயத்தில் நாம் மீண்டும் மீண்டும் அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருப்போம்.

எம்மைப் பயங்கரவாதிகள் எனக் கூறிய வெளிநாடுகள் எல்லாம் இன்று வரவேற்புக் கொடுக்கின்றன. சர்வதேச அளவில் எமது பிரச்சினை வலுப்பெற்று வருகிறது. இன்று ஓர் அரசியல் போர் நடைபெறுகிறது. இலங்கையில் அமைதி ஏற்படவேண்டும் என்பதில் வெளிநாடுகள் முனைபபாக நிற்கின்றன. இதற்கெல்லாம் காரணம் எமது இராணுவவலிமைதான். எமது பிரச்சினைக்கு நாமேதான் தீர்வு காணவேண்டும். இதனை எமது மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்" என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், "நமது ஈழநாடு" நிர்வாகப் பணிப்பாளருமான .எஸ்.சிவமகாராஜா தமது தலைமையுரையில் கூறியதாவது:-

வலி.வடக்கு பிரதேசம் ஏனைய பகுதிகளைவிட வேறுபட்டது. பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வலி. வடக்கின் பெரும்பகுதியில் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையுள்ளது. வலி.வடக்கு மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள், பல்வேறு தேவைகள் வித்தியாச மானவையாகவும், விசேடமானவையாகவும் இருக்கின்றன. ஆகவே, இப்பிரதேசத்திற்கு விசேட முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஆகவேதான் - வலி.வடக்குக்கென தனியான ஒன்றியம் இன்று அமைக்கப்படுகிறது. இந்த ஒன்றியத்தில் இணையும் பொது அமைப்புக்கள் திட்டங்களை இனங்கண்டு அபிவிருத்தி இலக்குகளை சரியான முறையில் முன்னெடுக்க உதவ வேண்டும் என்றார்.

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ.சி.நடராஜா உட்பட மற்றும் பலர் கருத்துரைகளை வழங்கினர்.

(105)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கர்நாடக இசைநிகழ்ச்சி

நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தானத்தின் பாலசம்ரக்ஷன கான சபாவினால் சிறப்புக் கர்நாடக இசையரங்கொன்று, இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்கக் கலா மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணனின் வயலின் சோலோ இடம்பெறவுள்ளது. இதில் மிருதங்கக் கலைஞர் கலாவித்தகர் பரமசாமி கிருபாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

### இந்தியத் தவில் கலைஞர்களின் கச்சேரி

மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில், இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள கலைஞர்களின் தவில்க்கச்சேரி இடம் பெறவுள்ளது. திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறும் இக்கச்சேரியில் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தவில் வித்துவான் கலைமாமணி முத்துக்குமாரசுவாமி, தவில் வித்துவான் ஸ்ரீகாந் ஆகியோருடன் நாதஸ்வர இசையை கலாசூரி. என்.கே.பத்மநாதனும், வித்துவான் கேதீஸ்வரனும் வழங்கவுள்ளனர்.

### விபத்தில் காயம்

(கொழும்புத்துறை)

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் சில்லு காற்றுபோனதால், கைதடிப் பாலத்தருகில் ஒருவர் விபத்துக்குள்ளானார்.

கொக்குவிலைச் சேர்ந்த கரிகாலன் என்னும் இவர், காயமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### சண்டிலிப்பாயில் கால்நடை வளர்ப்பு மருத்துவ நிலையம்

(சரசாலை)

சண்டிலிப்பாய் பகுதியில் கால்நடை வளர்ப்புத் தீனி உற்பத்தி, பால் விற்பனை போன்றவற்றை மேற்கொள்ள கால்நடை வளர்ப்பு மருத்துவ நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் பகுதிக்குட்பட்ட பகுதயிலுள்ள, பால் விற்க விருமபுவோர் தமது நிலையத்திற்கு வழங்கக்கூடிய - பாலின் அளவு, மற்றும் தங்களது பெயர் விபரங்களைப் பதிவு செய்யுமாறு கால்நடை வளர்ப்பு மருத்துவ உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

மானிப்பாய், சித்தங்கேணிப் பகுதியில் இவ்விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(34)

# வீதிகள், பொது இடங்களில் பட்டாசு கொளுத்த வேண்டாம்!

## - வலிகாமம் அரசியற்துறைப் பொறுப்பாளர் -

(யாழ்ப்பாணம்)

வீதிகள், மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் பட்டாசுகளைக் கொளுத்த வேண்டாமெனக் கடற்புலிகளின் வலிகாமம் பகுதி அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அண்மையில்- வீதிகள், பொது மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் பட்டாசுகள் மற்றும் வெடிகள் கொளுத்துவது அதிகரித்துள்ளதாகவும், இதனால்- வீதிகளில் பயணம் செய்வோர் குறிப்பாக, முதியவர்கள் மற்றும் பெண்கள் பல அசௌகரியங்களை அனுபவிப்பதாக, தம்மிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்புலிகளின் வலிகாமம் அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்துள்ளார்.

வீதிகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் பொதுமக்களுக்கு இடையூறாகப் பட்டாசுகள் மறறும் வெடிபொருட்கள் கொளுத்துபவர்களை இனங்காணும் பட்சத்தில், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(லி)

### கத்திக்குத்தில் இளைஞன் காயம்

(கொழும்புத்துறை)

இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு கத்திக்குத்தில் முடிவடைந்தது. மேற்படி சம்பவம் காரைக்கால்வீதி, இணுவில் என்னுமிடத்தில் கடந்த 19 ஆம் திகதி மாலை இடம்பெற்றது. இச்சம்பவத்தின் போது - அதேஇடத்தை சேர்ந்த பொன்னுத்துரை புலேந்திரன் என்னும் இளைஞன் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் சிகிச்சைககாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(60)

# சாவகச்சேரியில் கண்ணிவெடி எச்சரிக்கைப் பலகைகள்!

(சரசாலை)

தென்மராட்சியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களை, கண்ணிவெடி அகற்றும் நிபுணர்கள் பார்வையிட்டு, அப்பகுதிகளில் மிதிவெடி அபாய அறிவிப்புப் பலகைகள் நட்டு வருகின்றனர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் இருந்து கல்வயல் பகுதிவரை கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அண்மையில் -பெருங்குளம் பகுதியில் குழியொன்று தோண்டப்பட்ட போது அதிலிருந்து பெருமளவான வெடிபொருட்கள் மீட்கப்பட்டதையடுத்தே, இப்பகுதிகளில் கண்ணிவெடிகள் உள்ளனவா எனப் பரிசோதிககப்பட்டுவருகின்றது.

## பிரான்பற்று பகுதியில்

# ஆரம்ப சுகாதார நிலையம்; அமைத்துத்தரக் கோரிக்கை!

(மானிப்பாய்)

பண்டத்தரிப்பை அண்டியுள்ள பிரான்பற்றுக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை அமைத்துத் தரும்படி, அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப் புக்குழுக்கூட்டத்தில் கோரிக்கை விடுககப்பட்டுள்ளது.

பிரதேசசெயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு பரப்புக் காணி தேவையெனவும், இதற்குப் பிரான்பற்று கோயிலை அண்டியுள்ள பகுதியைத் தெரிவுசெய்யலாம் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இக்கட்டடம் கட்டுவதற்கான உதவியை அரசசார்பற்ற நிறுவனம் வழங்கும் எனவும் பிரதேசசெயலர் தெரிவித்தார்.

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அதிகாரிகள் பற்றாக்குறையாக இருப்பதால், ஓய்வுபெற்ற வைத்தியரைச் சேவையில் சேர்க்காமல் நிரந்தர சுகாதார வைத்தியர் ஒருவரை நியமிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது மலேரியா, டெங்குக் காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் அதிகமாகப் பரவுவதால்- இவற்றினைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிரதேசசெயலரிடம் கோரிககை விடுக்கப்பட்டது.

(100)

### மணிவாசகப் பெருமான் வீதி உலா

நவாலி வடக்கு அருள்மிகு பெத்தனாச்சி நாச்சியார் ஆலயத்தின் திருவெம்பாவை இறுதி நாளாகிய இன்று காலை, மணிவாசகப் பெருமான் வீதி உலா நடைபெறவுள்ளது.

(100)

### ஒளிவிழா

இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் ஒளிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவில், அருட் தந்தை ஞானரட்ணம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(41)

# மீசாலைப் பகுதி முழுவதற்கும் மின்சார விநியோகம் ஆரம்பம்

(சரசாலை)

சாவகச்சேரி - மீசாலைப் பகுதி முழுவதுக்கும் நேற்று முன்தினம் தொடக்கம் மின்சார விநியோகம் வழங்கப்பட்டுவருகின்றது.

பரீட்சார்த்த மின்விநியோகம், முன்னர் வீதியோரங்களில் உள்ள வீடுகளுக்கே வழங்கப்பட்டு வந்தது. தற்போது மீசாலைப் பகுதி முழுவதற்கும் மின்சாரம் வழங்கப்பட்டுவருகின்றது.

மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரைக்கும், காலை 5 மணி முதல் 6 மணிவரைக்கும் இம்மின் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தத்துக்குப் பின்னர், தென்மராட்சிப் பகுதிக்கான மின்விநியோகம் தடைப்பட்டிருந்தது. இப்போது மின் வசதிகளை வழங்குவதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் :ம.மதுஷா
முகவரி : பிள்ளையார் கோயிலடி, கோப்பாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

## காக்கையின் மூளை

அங்கம் - 4

தமிழில்- தி.தவபாலன்
நன்றி - ரிங்கிள்






அது நல்ல பசுக் கன்று. துள்ளித் துள்ளி விளையாடும். ஓடும். திரும்பி வரும். வட்ட மாக ஓடும். "அம்மா" என்று தாய்ப்பசுவைக் கூப்பிடும். நன்றாகப் பால் குடிக்கும்.

ஒருநாள் அது ஓடியது. நீண்ட தூரம் ஓடி விட்டது. நின்று பார்த்தது. அதற்குப் பயம் வந்துவிட்டது. உடம்பு நடுங்கியது. அப்பொழுது ஒரு சத்தம் கேட்டது. "யாரங்கே"? என்று சொல்லிக் கொண்டு ஒரு நரி வந்தது.

அந்த நரியைப் பசுக்கன்று பார்த்தது. பசுக்கன்றுக்குப் பயம் வந்தது. பசுக்கன்றைக் கடிக்க நரி மெல்ல மெல்ல வந்தது. "என்னைக் கடிக்க வேண்டாம், கடிக்க வேண்டாம்!" என்று பசுக்கன்று சொன்னது.

# நரியும், பசுக்கன்றும்

"நரியாரே வாருங்கள்! எங்கள் ஊரிலே கலியாண வீடு வயிறு நிறையச் சாப்பிடலாம். வாருங்கள் போவோம்" என்று பசுக்கன்று சொன்னது.

நரிக்கு நல்ல சந்தோசம், பசுக்கன்றுடன் வந்தது. பசுக்கன்று கலியாண வீட்டைக் காட்டியது. பின் கதவால் நரி அந்த வீட்டுக்குள் போனது. அப்பாடா! சோறு குவிந்து கிடந்தது. பெரிய பெரிய சட்டிகளிலே குழம்பு இருந்தது. தட்டங்களில் பலகாரம் இருந்தது.

அப்பொழுது வீட்டுக்கார அம்மா வந்தார். குள்ள நரியைப் பார்த்தார். ஒரு தடியால் நரிக்குப் "பளார்" என்று அடித்தார். நரி பாய்ந்து ஓடியது. அப்படியே காட்டுக்கு ஓடிவிட்டது.



# சிறுவர் அரங்கம்

## வார்த்தை விளையாட்டு – 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | | 2 | 3 | | |
| 4 | | | 5 | | 6 கை |
| | | 7 வி | | | |
| 8 | | | ம் | | |
| ம் | | 9 | | 10 சா | |
| 11 | | | ம் | | |

### இடமிருந்து வலம்

1. அயலில் உள்ள மிகப்பெரிய நாடு
4. இனிப்பான ஓர் உணவுப்பொருள்
5. இந்தியாவில் மிகப் பிரபலமான ஆறு. (புனிதமானது என்றும் சொல்வர்)
7. நிழல்
8. உயிரற்ற உடல்
9. இடது – என்பதற்கு எதிரானது (குழம்பியுள்ளது)
10. கையால் அளவிடும் ஒரு அளவீடு
11. உடல் வளர்ச்சிக்கு அவசியமான சத்து

### மேலிருந்து கீழ்

1. இனாம் இப்படியும் அழைக்கப்படும்
2. ஹோட்டல் என்பதை இப்படித் தமிழ்ப்படுத்தலாம் (தலைகீழாக)
3. வேள்வி என்பதற்கு ஒத்த சொல்.
6. கணவனை இழந்த பெண்
8. உயரமாக வளரும் புல் இனம்
10. முனிவன் என்றும் சொல்லலாம்

முழுப் பெயர் : ....................
கற்கும் பாடசாலை : ....................
கற்கும் தரம் : ....................
முகவரி : ....................
....................
கையொப்பம் .................... திகதி ....................

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 25-12-2002
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம்
தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.



## வார்த்தை விளையாட்டு-11 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**
1. சமாதானம் 7. கன்று
4. றேக்கு 9. காரம்
5. களை
6. குடி

**மேலிருந்து கீழ்**
1. மாதுளை 7. கடல்
3. தாடி 8. வாரம்
4. றேன்று 9. காடு
5. கறுப்பு



## வார்த்தை விளையாட்டு - 11

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
அ.டலிஸ்ரா
தொட்டிலடி மத்தி.
சண்டிலிப்பாய்

*2ஆம் பரிசு -*
தருமரத்தினம் ஹரிஹரன்
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

*3ஆம் பரிசு -*
ச.பிரசாந்தன்
நெல்லியடி,
கரவெட்டி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- தர்சினி தேவராசா
கற்கும் பாடசாலை :-
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பேச்சு, கதைப்புத்தகம் வாசித்தல்



முழுப்பெயர்:-வைகுந்தன் சிந்துஜன்
கற்கும் பாடசாலை :-
யா/கைதடி நுணாவில் பாடசாலை
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
கணிதம், ஆங்கிலம், விளையாட்டு



முழுப்பெயர்:-யேசுதாசன் றெஜினோல்ட்
கற்கும் பாடசாலை :-
புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
ஆங்கிலம், விஞ்ஞானம்



முழுப்பெயர் :- மேனகா கணேசலிங்கம்
கற்கும் பாடசாலை :-
யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
ரீ.வி.பார்த்தல், வானொலி கேட்டல் பத்திரிகை வாசித்தல்



முழுப்பெயர்:-பாலேஸ்வரி சபாரத்தினம்
கற்கும் பாடசாலை :-
யா/இந்து மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
வாசிப்பு, சங்கீதம்

# லேசர் ஒரு அறிமுகம்



இப்போது எதற்கெடுத்தாலும் லேசர் (Laser) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். இன்று நாம் பயன்படுத்தும் அநேகமான இலத்திரனியல் சாதனங்களில் லேசர் என்பது இன்றியமையாததொன்றாக இருக்கின்றது.

மனிதனின் அன்றாடத் தேவைகளுக்கு அத்தியாவசியமானதொன்றாக லேசர் மாறியிருக்கின்றது. மனிதர்களின் கைரேகைகளைச் சரி பார்த்துக் கொள்ளவும், வாகனங்களின் உதிரிப்பாகங்களை இணைக்கவும், கச்சானின் தோலை நீக்கவும், தொலைபேசிச் செய்திகளை இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லவும், கண்ணில் கரு விழிகளில் படரும் விழிவெண்படலத் திரையை அகற்றவும், சிறுநீரகக் கற்களை சத்திரசிகிச்சையின்றியே அகற்றவும், கண்டங்களின் நகர்வை அளவிடவும், எதிரிகளின் ஏவுகணைகளைத் தடுத்துச் சுட்டுவிழுத்தவும், இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பை நீக்கவும் என்று நீண்டு கொண்டேபோகும் வேலைகளைச் செய்வதற்கு லேசர் பயன்படுகின்றது.

லேசரின் உதவியுடன் பல வேலைகளைச் சுலபமாகச் செய்யலாம் என முன்னர் விஞ்ஞானிகள் கூறியபோது, அதைப் பலர் கற்பனையாகவே கருதினர். ஆனால், மிகக் குறுகிய காலத்துக்குள் லேசர் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் நுழைந்து விடுகின்ற அளவுக்கு, லேசர் தொழில்நுட்பம் வேகமாக வளர்ச்சியடைந்திருக்கின்றது.

வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டியை நீங்கள் கதிரையில் இருந்தபடியே ரிமோட் கொன்றோல் என்ற கருவியைப் பயன்படுத்தி இயக்குவதையோ, நிறுத்துவதையோ உங்களில் பலர் பார்த்திருக்கக்கூடும். இந்த ரிமோட் கொன்றோல் கருவி லேசர் தொழில்நுட்பத்தில்தான் இயங்குகின்றது.



20 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானம் இவ் உலகத்துக்கு வழங்கிய மிகப்பெரிய பரிசு லேசர் ஆகும். ஒவ்வொரு பொருளிலும் லேசரின் தாக்கம் அதிகரித்துள்ளது. ஆய்வு கூடங்களில் இருந்து வெளியே வந்து மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்து வருகின்றது இந்த லேசர்.

லேசர் என்பது என்னவென்று சுருக்கமாகச் சொல்வதானால், குறிக்கப்பட்ட ஒளித்தொகுப்பு அல்லது ஒளிக் கற்றை என்று சொல்லலாம். ஒரு குறிப்பிட்ட நிறத்தையோ அலை நீளத்தையோ கொண்ட ஒளிக்கற்றையின் எல்லா அலைகளும் ஒரே திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்குமானால் அது லேசர் எனப்படும். ஆனால் இத்தகையதொரு ஒளிக் கற்றையை உருவாக்குவது கடினமாகும்.



1917இல் அல்பேட் ஐன்ஸ்டீன் என்ற அறிவியல் மேதைதான் லேசரை இந்த உலகத்துக்கு அறிமுகப்படுத்தினார். சில நிலைகளில் அணுவோ மூலக்கூறோ, தன்னை நோக்கி ஈர்க்கிற ஒளியானது அவற்றை மேலும் அதே அலை வரிசை கொண்ட கதிரியக்கத்தைத் தூண்ட முடியும் என்ற கருத்தை முதன் முதலில் ஐன்ஸ்டீன் வெளியிட்டார்.

பின்னர் பல்வேறு விஞ்ஞான மேதைகளும், இந்த ஒளிக்கற்றையைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளும் வகையில், ஒளியைப் பெருக்கிக் கொள்ள முடியும் எனக் கண்டறிந்தனர். ஆனால் இந்தக் கண்டுபிடிப்பைப் பயன்தரத்தக்க வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு முப்பது ஆண்டுகளுக்கு மேல் சென்றது.

(அடுத்த வாரம் தொடரும்)

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## விடுகதைகள்

1) கூவி அழைப்பான், கூட்டி உண்ணுவான். அவன் யார்?

2) ஆடி வருவான், பாடி வருவான், வந்த வேகத்தில் திரும்பி வருவான். அவன் யார்?

3) கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளிதருவான். அவன் யார்?

4) அவனுக்கு வீடு, மற்றவருக்கு வலை. அது என்ன?

5) வாயிலே பூத்து, வாயிலே மறையும் பூ என்ன பூ?

6) பகலெல்லாம் ஊரைச்சுற்றுவான். இரவானால் கதவோரம் காத்திருப்பான். அவன் யார்?

7) வால் நீண்ட குருவிக்கு வாயில்லை, வயிறில்லை. அது என்ன?

8) அழைக்கும்போது உரக்கக் குரல் கொடுப்பான், பேசினால் காதுக்குள் கிசுகிசுப்பான். அவன் யார்?

9) வாழ்நாள் முழுவதும் வாயே மூடாதவன். அவன் யார்?

10) செம்பு நிறையச் சிவப்பு முத்துகள். அது என்ன?

## விடைகள்

1) காகம்
2) காற்று
3) மெழுகுதிரி
4) சிலந்தி
5) சிரிப்பு
6) செருப்பு
7) அகப்பை
8) தொலைபேசி
9) தபாற்பெட்டி
10) மாதுளம் பழம்

அ.மெஸ்ருன் நிஷா
தரம் 5 A

## உலகில் பெரியவை

1) நதி - அமேசன் நதி
2) சமுத்திரம் - பசுபிக்
3) நீர் வீழ்ச்சி - ஏஞ்சல்
4) பாலைவனம் - சகாரா
5) மலை - எவரெஸ்ட்
6) ஏரி - கஸ்பியன்
7) தீவு - கிறீன்லாந்து

முருகவேள் செந்தூரன்
கொக்குவில்

## வண்ண வண்ணப் பூக்கள்

வண்ண வண்ணப் பூக்களடா
வண்டு மொய்க்கும் பூக்களடா
மணங்கமழும் மலர்களடா
மனதை மயக்கும் மலர்களடா

காலையிலே மலரும் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்களடா
மாலையிலே மலரும் பூக்கள்
மணங் கமழும் மலர்களடா.

சோலை யெங்கும் பூக்களடா
மாலை கட்டும் பூக்களடா
மாலையுடன் மலர்ச் செண்டும்
மரியாதைச் சின்னமடா.
ஆண்டவனின் பூசைக்கு வேண்டுவது
மணங் கமழும் மலர்களடா.
மாண்டவரின் அஞ்சலிக்குச் சாத்துவது
மலர் வளையம் தானேடா.
திருமணத்தில் மணமக்கள் மாற்றுவதும்
மணங்கமழும் மலர்மாலை தானேடா
பெருமக்கள் வரவேற்பில் சூட்டுவதும்
மணங்கமழும் மலர்மாலை தானேடா.

மதி

## தாயுறவு

கற்பதனை தனதாக்கி
கருவில் எனை உருவாக்கி
உடம்பதனை தனதாக்கி
உயிராக எனையாக்கி
"உதிரத்தை உணவாக்கி
உள்ளத்தை மெழுகாக்கி
உலகில் எனை உயர்த்திய
உறவொன்று உண்டென்றால்
தாயுறவு!" அதுவென்பேன்!

சி.யசோதினி,
தரம் - 10,
யா/கலாநிதி ஆ.தியாகராசா
மத்திய மகா வித்தியாலயம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஐயவுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

-திருக்குறள்-

## நமது நோக்கு

# அமைதி நாடுவோரின் பொறுப்பு!

இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணத்தினைப் புரிந்து கொள்ளவும், அதனை வெளிப்படையாகப் பேசவுமாக தெற்கில் எழுந்து வரும் சில குரல்கள்- ஆரோக்கியமான சமாதானச் சூழலின் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.

அண்மையில் கொழும்பில், மாநாடொன்றில் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - புரிந்துணர்வு இன்மையும், உரிமை மறுப்புமே போராட்டத்துக்கும், இனப்பிரச்சினைக்கும் அடிப்படைக்காரணம் எனப் பேசியுள்ளார்.

இதேபோல - இனப்பிரச்சினைத் தீர்வுக்காக - விடுதலைப் புலிகளுடனான இணக்கப்பாட்டுடன், அதிகாரப் பகிர்வினை மேற்கொள்வதே சிறந்த வழியென கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண கூறியுள்ளார்.

இந்த வகையில் - தமிழர்கள் மீதான ஒடுக்கு முறைகளைப் பற்றிய கடந்த கால உண்மையைச் சரிவர உணர்ந்து கொள்ளும் மனப்பாங்கு - வரவேற்கப்பட வேண்டியதாகும்.

அதேவேளை - தமிழர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியமும் என்றுமில்லாத வகையில் - தெற்கில் பரவலாகவே வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

தென்னிலங்கையிலுள்ள புத்திஜீவிகள், பொது அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் 'சமாதானத்தின் தாக்கம்' வெகுவாகவே ஏற்பட்டிருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ்.குடாநாட்டுக்கு வருகைதரும் - தென்னிலங்கைப் பிரமுகர்கள், சமாதான விருப்பையும், அமைதியின் தேவைகளையும் உறுதிபடக்கூறிச் செல்கின்றனர்.

சிங்கள மக்களிடையே எழுந்துள்ள இந்தப் புரிந்துணர்வும் விழிப்புணர்வும் - தமிழ் மக்களால் மனமுவந்து வரவேற்கப்படும் அதேவேளை- இந்த விருப்பும், உறுதியும், எப்போதும் தொடரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

ஏனெனில் - ஒருபுறம் இத்தகையதொரு ஆக்கபூர்வமான சூழல் சிங்களச் சமூகத்தில் உருவாக்கப்படும்போது, மறுபுறம் - ஜே.வி.பி, பொதுஜன ஐக்கிய முன்னணி, சிஹல உறுமய போன்ற அரசியற்கட்சிகளும் பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்புக்களும் - சமாதானத்திற்கெதிராகவும், தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதைக் கண்டித்தும் - கச்சை கட்டிக் கொண்டு, தீவிர இனவாதப் பிரசாரத்தில் இறங்கியுள்ளன.

தொடரும் இந்த அமைதி எதிர்ப்பு முயற்சிகளில் - நேற்றுமுன்தினம் கூட ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா - தனது பேச்சொன்றில்,

ஐக்கிய தேசிய முன்னணியின் கடந்த ஒரு வருடகால ஆட்சியில் புலிகள் ஈழத்தை அமைத்து விட்டதாகவும், சமஷ்டி என்பது ஈழத்தை உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தும் உத்தியே எனவும் இனவாதத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தகைய போக்குகள் - அமைதிக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடாமல், தீர்வு நோக்கிய பாதைகளுக்கு தடைக்கற்களாக உருவாகிவிடாமல் தடுக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

இந்த நிலையிலேயே - தென்னிலங்கையில் நியாயபூர்வமாகச் சிந்திப்பவர்களுக்கான கடமை ஆரம்பமாகின்றது.

வெறுமனே- வடக்கிற்கு வ்ரும்போதும், உயர்மட்டக் கருத்தரங்குகளலும் மாத்திரம் தங்களது கருத்துகளை முன்வைப்பதோடு நின்றுவிடாமல் - தெற்கின் ஒவ்வொரு சிங்களக் கிராமத்தையும் எட்டக்கூடியதாக- தமது கருத்துக்கள் சென்றடையக் கூடியதாக அவர்கள் செயலாற்ற வேண்டும்.

இலங்கைத்தீவின் அமைதியான எதிர்காலம் - தமிழர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது என்ற செய்தியை மிகச் சரியான வகையில் - சிங்கள மக்களிடையே கொண்டு செல்வதற்கும், யதார்த்தத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வைப்பதற்கும் - சிங்கள சமூகத்தின் புத்திஜீவிகளும், பொது அமைப்புக்களும், தெற்கில் அமைதி நாடும் சகலரும், முழுமூச்சாகச் செயற்படுவார்களேயானால்- அது இத்தீவில் அமைதியும், மகிழ்ச்சியும் நிரந்தரமாகச் சிறந்த அடித்தளமாக அமையும்.

# அரச ஊழியரும் தொண்டு அமைப்புக்களும் இணைந்தாலே அபிவிருத்தி சாத்தியமாகும்!

## திருமலையில் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர்

(திருகோணமலை)

அரசாங்க ஊழியர்கள் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு விரும்புவதில்லை. அதுபோலவே, தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அரச ஊழியர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு விரும்ப மாட்டார்கள். அபிவிருத்தியினை மேற்கொள்ள வேண்டுமாயின் இரு துறையினரும் இணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு கொள்கை திட்ட அமுலாக்கல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சுகத் ரணகே தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொழிற்படும் தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் பயிற்சிப்பட்டறை ஒன்றினை, திருகோணமலை துளசிபுரத்தில உள்ள கல்வி அமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில், கொள்கைத்திட்ட அமுலாக்கல் அமைச்சு நடத்தியது. இதில்- யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, மாவட்டங்களைச் சேர்ந்த 40 தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும், அவ்வவ் மாவட்டங்களைச்சேர்ந்த அரச அதிகாரிகள் 20 பேரும் பங்கு கொண்டனர்.

பணிப்பாளர் நாயகம் சுகத் ரணகே அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இரண்டு துறையினரும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதற்காக இவ்வாறான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு, ஆலோசனைகள் பெறப்படுகின்றன. முன்னர், ஏனைய மாகாணங்கள் ஐந்திலும் இவ்வாறான பட்டறைகள் நடத்தப்பட்டு வந்துள்ளன. அரச அதிகாரிகளால் மட்டும் அபிவிருத்தியினை முன்னெடுக்கமுடியாது. தொண்டர் நிறுவனங்களும், தனியார் துறையினரும் இதில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்றார்.

விசேட அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியாக கலந்து கொண்ட பிரதி திட்டமிடல் பணிபபாளர் ந.புகெந்திரன் அங்கு உரையாற்றுகையில்,

நாட்டில் ஏற்பட்ட கொடிய யுத்தம் காரணமாக 372 அகதிகள் முகாம்கள் நாட்டில் காணப்படுகின்றன. வடக்கு - கிழக்கு பிரதேசம் முற்றாக அழிந்து கிடக்கின்றது. சுமார் 42,000 குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர். மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்று மீளவும் குடியமர ஆயத்தமாக உள்ளனர். இவர்களின் சொந்த இடங்களில் சுமார் 12,000 வீடுகளை நாம் கட்டத் தொடங்கியுள்ளோம். அரசாங்கமும் தொண்டர் நிறுவனங்களும் ஒன்றிணையாது விட்டால் இவர்களுக்கான வீடுகளை எம்மால் கட்டிக்கொடுக்க முடியாது.

நாட்டில் யுத்தம் ஓய்ந்து விட்டது. யுத்த வீரர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது நாட்டில் அபிவிருத்தி யுத்தம் ஆரம்பித்துள்ளது.

நாடு தற்போது மகிழ்ச்சியில் உள்ளது. இந்த மகிழ்ச்சி தொடர வேண்டுமாயின், அபிவிருத்தி சரியான முறையில் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்தினர் தொண்டர் நிறுவனங்களில் மக்கள் அதீத நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். அரச அதிகாரிகளும் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். எம்மிடம் உள்ள பொறுப்புக்கள் மிகப் பெரியன.

தொண்டர் நிறுவனங்கள் நிவாரணம் வழங்கும் நிறுவனங்களாகவே இதுவரை இருந்துவந்துள்ளன. அதனை மாற்ற வேண்டும். அபிவிருத்தி நோக்கி அவை திசை திருப்பப்பட வேண்டும். நிவாரணம் எமது மக்களை சோம்பேறிகளாக்கிக் கொண்டிருக்கின்றது என மேலும் தெரிவித்தார்.

# கோப்பாய் வைத்தியசாலைக்கு ஆனந்தசங்கரி விஜயம்!

(நாயன்மார்கட்டு)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கும், கோப்பாய் சுகாதாரத் திணைக்களத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்தார்.

வைத்தியசாலையில் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்பு வேலைகள் தொடர்பாக வைத்தியசாலை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், கோப்பாயில் தற்காலிகமாக இயங்கும் காசநோயாளர் பகுதியை இடமாற்ற நடவடிக்கை எடுப்பது பற்றியும் அவர் கலந்துரையாடியுள்ளார். (61)

## பொ.ஐ.மு. ஆட்சியில் இடம் பெற்ற

# மூன்று மோசடிகள் குறித்த விசாரணை ஜனாதிபதியிடம் திங்களன்று அறிக்கை!



(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மூன்று முக்கிய நிதி மோசடிகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட அமைச்சர்மட்டக் குழுவின் அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

முன்னைய ஆட்சிக்காலத்தில் அரச துறையில் பெரும ளவிலான நிதி மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு மோசடிகள் இடம்பெற்றதாகக் கருதப்படும் மூன்று சம்பவங்கள் குறித்தே விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் பாவனைக்கென ஆடம்பரக் கார்கள் கொள்வனவு செய்யப்பட்டமை, ஹொரணையில் றப்பர் தொழிற்சாலை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மோசடி செய்யப்பட்ட சம்பவம், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கோல்ப் மைதானம் அமைக்கக் காணி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவகாரம் என்பன தொடர்பான விசாரணை அறிக்கைகளே நாளை மறுநாள் கையளிக்கப்படவுள்ளன.

இந்த அறிக்கைகளில் தமக்கு நம்பிக்கை எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா, எதற்கும் இதைத்தான் ஒருமுறை பார்ப்பேன் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த விசாரணை அறிக்கைகள் மூலம் ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் இடையிலான உறவு பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படும் என அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பாக்குநீரிணைக்குக் குறுக்கே எண்ணெய் விநியோகக்குழாய்!

## இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் ஆராய்வு

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 30 கி.மீ நீளமான எண்ணெய் விநியோகக் குழாய் அமைப்பது தொடர்பாக இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் ஆராய்ந்து வருகின்றது.

சென்னையிலுள்ள சுத்திகரிப்பு ஆலையிலிருந்து மாதமொன்றுக்கு 30 ஆயிரம் தொன் டீசலையும், 10 ஆயிரம் தொன் விமான எரிபொருளையும் இக்குழாய் மூலம் எடுத்துவர முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கப்பற் போக்குவரத்துச் செலவில் 40 சதவீதத்தைக் குறைக்க முடியுமென்றும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் எரிபொருள் விற்பனையில் இந்நிறுவனம் அடுத்த வருடம் முதல் ஈடுபடவுள்ளது. ஏற்கனவே, 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை குத்தகைக்கு எடுத்துள்ள இந்நிறுவனம், மேலும் 150 தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைப்பது குறித்தும் ஆராய்ந்து வருகிறது.

# மண்கும்பானில் கடற்படையினர் முகாமொன்றைக் கைவிட்டனர்!

(மண்கும்பான்)

மண்கும்பானில் அமைக்கப்பட்டிருந்த நான்கு கடற்படை முகாம்களில் ஒன்று கடந்த 17 ஆம் திகதி அகற்றப்பட்டுள்ளது.

மண்கும்பான் கறுப்பாத்தி அம்மன் ஆலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த கடற்படை முகாமே அகற்றப்பட்டிருக்கின்றது.

இந்த முகாமிலிருந்த இராணுவ உபகரணங்கள் கடற்கரையை அண்டியுள்ள முகாமுக்கும் சாட்டிப் பகுதியிலுள்ள முகாமுக்கும் கொண்டு செல்லப்பட்டன.

கடற்கரைப்பகுதியிலுள்ள முகாமும், சாட்டி முகாமும் மக்கள் குடியிருப்புப் பகுதியில் அமைந்திருப்பதால் இவற்றையும் அகற்றுமாறு கடற்படையினரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு

# மருதங்கேணி செயலர் பிரிவில் 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு 15,000 ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலகவட்டாரங்கள் தெரிவித்தன.

மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு - 15,000 ரூபா, பச்சிலைப்பள்ளி ப.நோ. கூ.சங்க கிராமிய வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக 40 லட்சம் ரூபா பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளதாக வும், இத்தொகை 266 குடும்பங்களுக்கு மாத்திரம் கொடுக்கக் கூடியதாகவுள்ளதாகவும், பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

# சித்த மருத்துவத்துறை குறித்து யாழ்.பல்கலைக்கழகம் கவனிக்குமா?

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாக சித்த மருத்துவத்துறை கைத்டியில் இயங்கி வருகின்றது. தமிழரின் பூர்வீக மருத்துவமான சித்த மருத்துவத்தின் நிலையோ பல்கலைக்கழக அந்தஸ்தை பெற்றிருந்தும், எந்தவித முன்னேற்றமும் இல்லாது காணப்படுவது கவலைக்குரியதும், வேதனைக்குரியதுமான ஒரு விடயமாகும். குறிப்பிட்ட சில பரமபரை மருத்துவர்களாலும், சித்த மருத்துவத்துறையில் இருந்து உள்ளகப்பயிற்சியை முடித்து வெளியேறிய சில மருத்துவர்களாலுமே சித்தமருத்துவச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

தன்னகத்தில் பல அரிய மருத்துவமுறைகளை உள்ளடக்கிய, சித்த மருத்துவத்திற்குரிய தனித்துவத்தையோ, கவனிப்பையோ எவரும்



## செய்திக்கட்டுரை

கொடுப்பதில்லை. ஆனால், மேடைப் பேச்சுக்களில் சித்தமருத்துவத்தை வளர்ப்பவர்கள் ஏராளம். சித்தமருத்துவத்தைப் போதிப்பவர்களே அதன் சிறப்பை உணராது, அதனை விளங்கிக் கொள்ளாது, குறை காணும் நிலையிலேயேயுள்ளனர். BSMS பட்டதாரிகளிடம் சித்த மருத்துவச் சிகிச்சையை எதிர்பார்த்துச் செல்லும் மக்கள் பெரும் ஏமாற்றத்தையே அடைகின்றனர்.

இந்நிலை இப்படி இருக்க, சித்த மருத்துவத்தினைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பல்கலைக்கழக அந்தஸ்து உள்ள, சித்தமருத்துவத்துறை விரிவுரையாளர் மத்தியில் ஏற்பட்ட நிர்வாகப் பிரச்சினைகள், அதிகாரப் போட்டி போனறவற்றினால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கொழும்பில் இருந்து, பேராசிரியர் ரி.பத்மநாதனை சித்த மருத்துவத்துறை பற்றிய நிலையைத் தனித்தனியே விரிவுரையாளர்களையும், மாணவர்களையும் சந்தித்து ஆராய்ந்து வருமாறு அனுப்பியுள்ளது.

சித்தமருத்துவத்தினைப் பேணிக் காக்க சித்தமருத்துவத்துறையால் முடியாது. எனவே இதனை சித்த மருத்துவபீடம் அல்லது சித்த மருத்துவ நிறுவனமாக மாற்ற வேண்டும் என ஆலோசனையும் கூறப்பட்டுள்ளது. சித்த மருத்துவ விரிவுரையாளர்கள், மாணவர்கள் பலகலைக்கழக அந்தஸ்துள்ள சிதத மருத்துவ பீடமாகவே மாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். எனினும், சிலர் இதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து பிரித்து சித்த மருத்துவ நிறுவனமாக மாற்ற முயன்றுகொண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. இது சித்தமருத்துவ ஆர்வலர் மத்தியல பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் மாணவர்கள், சித்த மருத்துவ நிறுவனமாக மாற்றினால் அதற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட வேண்டியநிலைக்கு கொணடு வரும் எனக் கூறியுள்ளனர்.

இந்தப் பிரச்சினையில் - இலங்கையில் இருக்கும் ஒரே ஒரு சித்த மருத்துவத்துறையினை, தமிழரின் சொத்தை, பல்கலைக்கழக அந்தஸ்தில் இருந்து யாழ்.பல்கலைக் கழகம் விட்டுவிடுமா? அவ்வாறு விடப்படுமாயின் சித்தமருத்துவத்தின் எதிர்காலநிலை என்ன? என்பது பெரும் கேள்விக்குறியே. இது வரை காலமும் போதிய அக்கறை எடுககாவிடினும், இனியாவது தமிழர் மருத்துவத்திற்குரிய இடத்தை யாழ்.பல்கலைக்கழகம் அளிக்குமா? இதற்கு பொறுப்பான அனைவரும் ஒரு நல்ல தீர்வை உருவாக்குவார்களா? என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**தி.சுதர்மன்**

# கலாநிதிப் பட்டத்திற்குப் பின்னர் என்ன கொம்பா முளைத்திருக்குது?

**நாடகக் கலைஞர் குழந்தை சண்முகலிங்கத்துக்கு கலாநிதிப் பட்டம் அளிக்கப்பட்டபோது அவருக்கு ஒரு பாராட்டு விழா எடுக்க உத்தேசித்து அவரிடம் போனபோது ஏற்பட்ட அனுபவம் இது.**

கோவில் பூசை முடிந்து வெளியில் வந்தபோது சிவபாதம் தென்பட்டார்.

"உங்களைடம்தான் வந்தனான்" என்றார். ஆச்சரியமாக இருந்தது.



எங்கள் ஊரில் எந்தப் பொது விடயமாக இருந்தாலும் அவர் தான் முன்னெடுப்பார். ஞானப்பிரகாசர் முனிவர் குருபூசையா, நாவலர் பணிமன்ற விழாவா, புத்தக வெளியீடா எதற்கும் முன்நிற்பார். தனது சொந்தப் பணத்தை செலவழிப்பதும் உண்டு.

அப்படிப்பட்டவர் என்னிடம் ஏன் வருகிறார் என எண்ணியவாறு "சொல்லுங்கோ என்ன விழா எடுக்க உத்தேசம்" என்று உற்சாகத்துடன் கேட்டேன்.

## இப்படியும் ஒருவர்!

"பாராட்டு விழா" என்றார். என் உற்சாகம் ஓடி மறைந்துவிட்டது. பத்திரிகையை எடுத்தால் எல்லாம் பாராட்டு மயம். செய்திகளிலும் பார்க்க, பாராட்டு விளம்பரங்களே அதிகம். இடப்பெயர்வின் பின் ஆரம்பித்து, மிக விரைவில் அபிவிருத்தி அடைந்தது ஒன்று உண்டென்றால் அது பாராட்டுக் கலாசாரம்தான். அன்று காலையில்கூட பாராட்டு விளம்பரங்களைப் பார்த்து மனம் சலித்திருந்தபோது, என் மதிப்புக்குரிய பெரியவர்கூட பாராட்டுவிழா என்கிறார்.

"இந்தப் பாராட்டு விழா உண்மையில் தேவையா?" என்று கேட்டேன்.

"ஏன் அப்படிக் கேட்கிறீங்க"

"பாராட்டுகள் கேலிக்கூத்தாக உருவெடுத்துள்ளன. ஸ்கொலர்சிப் சோதனையில் சித்திபெற்றால் பெற்றோரே பிள்ளையின் படத்தைப் போட்டு பாராட்டுகிறார்கள்.

விரிவுரையாளர் பேராசிரியரானால, பேராசிரியர் பீடாதிபதியானால் படம் போட்டு பாராட்டுகிறார்கள். அறிவுஜீவிகள் எனக் கணிக்கப்படுபவர்களே பாராட்டு மோகத்தில் மயங்கினார்கள். தெய்வீக மாந்தர்கள் என, மக்கள் பெருமதிப்பு வைததுள்ளவர்களே இந்தப் பாராட்டு வலையில் சிக்கியுள்ளார்கள். வேண்டாம், நீங்களும் இதை முன்னெடுக்காதீர்கள்" என்றேன்.

அவர் விடவில்லை "இவர் என் ஆசிரியராக இருந்தவர். கலாநிதிப்பட்டம் கிடைத்திருக்கு. எங்கள் வீட்டிலை சிறிய விழா எடுப்பம்" என்றார்.

இவர் யாரை குறிவைத்திருக்கிறார் என்று எனக்குப் புரிந்துவிட்டது. குழந்தை மனம்கொண்ட அவருக்கு இதெல்லாம் பிடிக்காது. எனக்கு நன்கு தெரியும்.

"பாராட்டுவிழா என்றால் அவருக்கு அலாஜி. பத்திரிகைக் காரியாலயத்திலும் பாராட்டு விளம்பரம் தன்னைப்பற்றி வந்தால் ஏற்கவேண்டாம் என்று சொன்னதாக அறிந்தேன்" என்றேன்.

"இது பெரியவிழா இல்லை. அதிகம் செலவு வராது. நீங்கள் யோசிக்காதையுங்கோ"

செலவுக்காகத்தான் நான் தடுக்கிறேன் என நினைத்துவிட்டார் எனப் புரிந்தது.

"எப்போ வைக்க உத்தேசம்?"

"பொங்கல் அன்று பின்னேரம். என்ரை வீட்டில் ஒரு நாற்பதுபேர் வரையிலை அழைத்து, ஒரு தேநர் விருந்து. அவ்வளவுதான்" என்றார்.

"அவர் சம்மதித்து விட்டாரா?"

"அதுக்குத்தான் உங்களுடைய உதவி தேவை. நீங்கள்தான் அவரைச் சம்மதிக்க வைக்க வேண்டும். நீங்கள்தான் அவரிடம் ஏச்சு வாங்க வேண்டும்" என்று கூறாமல் கூறுகிறார் என்று புரிந்தது. நான் விடவில்லை. அவரையும் வற்புறுத்திக் கலாநிதி வீட்டிற்கு அழைத்து சென்றேன்.

அன்று நல்லமழை. மாலை ஆறு மணிக்கு இருவரும் கலாநிதி வீட்டிற்கு போனோம். கலாநிதி ஒரு ஓலை விசிறியால் விசிக்கிக் கொணடிருந்தார். இந்த மழைக் குளிரிலும் இவருக்குப் புழுக்கமா என்று எண்ணியவாறு அருகே போன போதுதான் புரிந்தது. இவரைப் பாராட்டப் பலர் மொயத்துக் கொண்டிருந்தார்கள். வேறு யாரும் இல்லை. நுளம்புக் கூட்டம். அவை ரீங்காரம் செய்து கொண்டு முத்தம்கொடுக்க முண்டியடித்தன. அவைகளை விசிறியால் விரட்ட, பகீரதப்பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் "வாருங்கோ, என்ன இந்த நேரம்?" என்றார்.

எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாது மௌனமாக இருந்தோம். பின் சிவபாதம் "பொங்கல் அன்று மாலை ஒரு தேநர் விருந்து. நீங்கள் அவசியம் வரவேண்டும். எங்கடை வீட்டைதான்"

"போன பொங்கலுக்கு தேநர் விருந்து இல்லையே. ஏன் இப்ப?"

"இல்லை, உங்களுக்கு கலாநிதிப்பட்டம் கிடைச்சிருக்கு"

"கலாநிதிப் பட்டத்திற்குப் பிறகு இரண்டு கொம்பு முளைத்திருக்கா எனக்கு?"

என்ன சொல்வதென்று தெரியவில்லை. நாங்கள் மௌனமாக இருநதோம். அவர் மேலும் தொடர்ந்தார்.

"இந்தப் பட்டத்தைத் தரப்போகிறார்கள் என முன்பே தெரிந்திருந்தால் மறுத்திருப்பேன். தந்து விட்டார்கள். இனிவேண்டாம் என்று சொல்வது பண்பல்ல. அந்த ஸ்தாபனத்தை கௌரவிக்க வேண்டும்" என்றார் அவர். பாருங்கள்! விளம்பரம் தேடும் உலகில் இப்படியும் ஒருவர்.

- *சு.பசுபதிசிவம்*

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - 2002

நேற்றைய தொடர்ச்சி....

| | | |
|---|---|---|
| 125). | யா/சா/4831 | திரு. சின்னத்துரை தங்கராசா |
| 126). | யா/சா/4854 | திரு. சில்வேஸ்ரர் மரிசலீன் |
| 127). | யா/சா/5002 | திரு. முத்து வீரகத்தி |
| 128). | யா/சா/5006 | திரு. காசித்தம்பி சின்னத்துரை |
| 129). | யா/சா/5010 | திரு. நடராசா தர்மலிங்கம் |
| 130). | யா/சா/5036 | திரு. தில்லையம்பலம் நடராசபிள்ளை |
| 131). | யா/சா/5060 | திரு. பொன்னையா சுப்பிரமணியம் |
| 132). | யா/சா/5095 | திரு. தங்கராசா திலகரத்தினம் |
| 133). | யா/சா/5112 | திருமதி. சிவபாக்கியவதி திருநாவுக்கரசு |
| 134). | யா/சா/5192 | திரு. சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை |
| 135). | யா/சா/5212 | திருமதி. சிவமணி தெய்வேந்திரம்பிள்ளை |
| 136). | யா/சா/5223 | திருமதி. கமலம்மா வீரசிங்கம் |
| 137). | யா/சா/5261 | திரு. வேலுப்பிள்ளை தம்பு |
| 138). | யா/சா/5339 | திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை |
| 139). | யா/சா/5388 | திருமதி. செல்லம்மா தம்பையா |
| 140). | யா/சா/5390 | திரு. நல்லதம்பி தியாகராசா |
| 141). | யா/சா/5406 | திருமதி. இராசேஸ்வரி பத்மநாதன் |
| 142). | யா/சா/5473 | திருமதி. மகேஸ்வரி கந்தசாமி |
| 143). | யா/சா/5474 | திருமதி. புவனேஸ்வரி சபாபதி |
| 144). | யா/சா/5515 | திருமதி. அன்னலட்சுமி கனகரத்தினம் |
| 145). | யா/சா/5522 | திருமதி. புவனேஸ்வரி தர்மராசரட்ணம் |
| 146). | யா/சா/5564 | செல்வி. நாகேஸ்வரி சபாபதிப்பிள்ளை |
| 147). | யா/சா/5600 | திரு. மார்க்கண்டு யோகேஸ்வரன் |
| 148). | யா/சா/5604 | திரு. முத்துக்குமாரு சூரியகுமார் |
| 149). | யா/சா/5610 | திருமதி. நாகேஸ்வரி தம்பிராசா |
| 150). | யா/சா/5688 | திரு. பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை |
| 151). | யா/சா/5708 | திரு. கதிர்காமு இராமலிங்கம் |
| 152). | யா/சா/5756 | திரு. வயிரமுத்து சின்னத்தம்பி |
| 153). | யா/சா/5766 | திருமதி. மகேஸ்வரி பரமசிவம் |
| 154). | யா/சா/5780 | திரு. சங்கரன் கனகலிங்கம் |
| 155). | யா/சா/5797 | திரு. கதிர்காமர் பரமானந்தர் |
| 156). | யா/சா/5851 | திருமதி. இராசம்மா ஆறுமுகம் |
| 157). | யா/சா/5854 | திரு. சின்னவன் செல்வராசா |
| 158). | யா/சா/5867 | திரு. வீரகத்தி சின்னத்தம்பி |
| 159). | யா/சா/5925 | திருமதி. சின்னப்பிள்ளை சின்னையா |
| 160). | யா/சா/5931 | திரு. மாணிக்கர் கதிரித்தம்பி |
| 161). | யா/சா/6001 | திரு. சுப்பிரமணியம் சண்முகம் |
| 162). | யா/சா/6016 | திரு. கணேசு விமலநாதன் |
| 163). | யா/சா/6031 | செல்வி. முத்துப்பிள்ளை சின்னத்தம்பி |
| 164). | யா/சா/6040 | திருமதி. கலைமதி உமாபதிசிவம் |
| 165). | யா/சா/6053 | திரு. சந்தியோகு பிரான்சிஸ் |
| 166). | யா/சா/6056 | திருமதி. அமலோதயராணி தேவதயாளன் |
| 167). | யா/சா/6111 | திருமதி. சரஸ்வதி தவராசா |
| 168). | யா/சா/6142 | திரு. காசிநாதர் சின்னத்துரை |
| 169). | யா/சா/6161 | செல்வி. விஜயகௌரி சுப்பிரமணியம் |
| 170). | யா/சா/6171 | திரு. வாரித்தம்பி கணேசமூர்த்தி |
| 171). | யா/சா/6203 | திரு. வாரித்தம்பி அதிஸ்டலிங்கம் |
| 172). | யா/சா/6206 | திரு. கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை |
| 173). | யா/சா/6225 | திரு. செல்லையா கந்தசாமி |
| 174). | யா/சா/6328 | செல்வி. சுகிர்தராணி சுப்பிரமணியம் |
| 175). | யா/சா/6350 | செல்வி. இரத்தினேஸ்வரி இராசேந்திரம் |
| 176). | யா/சா/6355 | திரு. முத்தர் செல்லையா |
| 177). | யா/சா/6454 | திருமதி. தெய்வானை வல்லிபுரம் |
| 178). | யா/சா/6472 | செல்வன். சிவசுப்பிரமணியம் தினேஷ் |
| 179). | யா/சா/6578 | திரு. சின்னையா திருநாவுக்கரசு |
| 180). | யா/சா/6591 | திரு. நாகர் சின்னர் |
| 181). | யா/சா/6633 | திரு. சடையன் சிவஞானம் |
| 182). | யா/சா/6651 | திரு. முருகுப்பிள்ளை பரமசாமி |
| 183). | யா/சா/6654 | திருமதி. வள்ளிப்பிள்ளை அமிர்தலிங்கம் |
| 184). | யா/சா/6656 | திரு. துரைச்சாமி தனபாலசிங்கம் |
| 185). | யா/சா/6661 | திரு. வேலுப்பிள்ளை பாலசிங்கம் |
| 186). | யா/சா/6723 | திரு. செல்லத்துரை சிவலிங்கம் |
| 187). | யா/சா/6771 | திருமதி. செல்வராணி அருமைரத்தினம் |
| 188). | யா/சா/6823 | திருமதி. மங்களாதேவி விநாயகமூர்த்தி |
| 189). | யா/சா/6825 | திரு. சுந்தரம் விமலச்சந்திரன் |
| 190). | யா/சா/6863 | திரு. இராசரத்தினம் இரவி |
| 191). | யா/சா/6894 | திரு. சுப்பிரமணியம் பாலசிங்கம் |
| 192). | யா/சா/6930 | திரு. செல்லையா அழகராசா |
| 193). | யா/சா/6966 | திரு. வைத்திலிங்கம் வேலுப்பிள்ளை |
| 194). | யா/சா/6984 | திருமதி. செல்வம் கந்தையா |
| 195). | யா/சா/7005 | திரு. ஆறுமுகம் செல்லையா |
| 196). | யா/சா/7018 | திருமதி. தங்கம்மா வினாசித்தம்பி |
| 197). | யா/சா/7033 | திரு. சினனத்தம்பி சின்னத்துரை |
| 198). | யா/சா/7046 | திரு. வேலாயுதம் பாலச்சந்திரன் |
| 199). | யா/சா/7048 | திரு. சண்முகம் திரவியநாயகம் |
| 200). | யா/வெ/37 | திருமதி. கிறிஸ்ரினாசாந்தி பாலசிங்கம் |
| 201). | யா/வெ/51 | திருமதி. நாகேஸ்வரி தேவபாலன் |
| 202). | யா/வெ/102 | செல்வி. றோகினி விநாயகமூர்த்தி |
| 203). | யா/வெ/103 | திருமதி. பிறேமினி இராமேஸ்வரன் |
| 204). | யா/வெ/313 | திரு. தம்பு சின்னத்துரை |
| 205). | யா/வெ/363 | திருமதி. ஜெயந்தி இராசரத்தினம் |
| 206). | யா/வெ/525 | திருமதி. தங்கமலர் மரியதாஸ் |
| 207). | யா/வெ/602 | திருமதி. நல்லமுத்து சங்கரப்பிள்ளை |
| 208). | யா/வெ/654 | திரு. வேலுப்பிள்ளை இராஜேந்திரன் |
| 209). | யா/வெ/808 | திருமதி. சிவயோகம் சந்திரசேகரம் |
| 210). | யா/வெ/1002 | திருமதி. யசோதராணி செல்வராஜா |
| 211). | யா/வெ/1004 | திருமதி. மீனாட்சி சிவகுருநாதன் |
| 212). | யா/வெ/1081 | திரு. தியாகராஜா திசைவீரசிங்கம் |
| 213). | யா/வெ/1085 | திருமதி. திலகவதி அருணாசலம் |
| 214). | யா/வெ/1096 | திருமதி. செல்லம்மா விஸ்வலிங்கம் |
| 215). | யா/வெ/1101 | திருமதி. நவமணி குணபாலசிங்கம் |
| 216). | யா/வெ/1257 | திருமதி. சிவபாக்கியேஸ்வரி சோமசுந்தரம் |
| 217). | யா/வெ/1286 | திரு. தாமோதரம்பிள்ளை பாலசுப்பிரமணியம் |
| 218). | யா/வெ/1340 | திரு. சந்தனம் அருளானந்தம் |
| 219). | யா/வெ/1360 | திருமதி. பவளம் மாணிக்கம் |
| 220). | யா/வெ/1383 | திருமதி. யோகராணி துரைசிங்கம் |
| 221). | யா/வெ/1385 | திருமதி. மேரிஅக்னஸ் ஸ்ரீபன்ஜோர்ச் |
| 222). | யா/வெ/1397 | திருமதி. சரஸ்வதி பாஸ்கரன் |
| 223). | யா/வெ/1409 | திரு. கந்தையா தர்மலிங்கம் |
| 224). | யா/வெ/1417 | திருமதி. சத்தியலச்சுமி வீரசிங்கம் |
| 225). | யா/வெ/1426 | திருமதி. சாரதா தயாபரன் |
| 226). | யா/வெ/1437 | திருமதி. கௌரி மகேந்திரன் |
| 227). | யா/வெ/1448 | திரு. அண்ணாச்சாமி நிர்மலானந்தன் |
| 228). | யா/வெ/1454 | திருமதி. சிவசோதி கிருஸ்ணசாமி |
| 229). | யா/வெ/1627 | திரு. இளயதம்பி சோமசுந்தரம் |
| 230). | யா/வெ/1653 | திரு. கிருஸ்ணசாமி ஏரம்பமூர்த்தி |

**பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு**

| | | |
|---|---|---|
| 001). | கி/ப/2 | திரு. குழந்தைவேலு தம்பாப்பிள்ளை |
| 002). | கி/ப/46 | திரு. செல்லத்துரை சிவசிதம்பரம் |
| 003). | கி/ப/50 | திரு. செல்லத்துரை மகேந்திரன் |
| 004). | கி/ப/69 | திரு. மாணிக்கம் குமாரசாமி |
| 005). | கி/ப/75 | திரு. வீரகத்தி கதிர்காமு |
| 006). | கி/ப/101 | திரு. சின்னத்தம்பியர் பொன்னையா |
| 007). | கி/ப/306 | திரு. முருகேசு தங்கவேல் |
| 008). | கி/ப/310 | திரு. ஆசீர்வாதம் அருளப்பு |
| 009). | கி/ப/348 | திருமதி. கிறிஸ்ரீனம்மா சீமாம்பிள்ளை |
| 010). | கி/ப/406 | திருமதி. அனிற்றா ஜொய்சி பீற்றர் அருள்தாஸ் |
| 011). | கி/ப/447 | திருமதி. பரேசம்மா பேதுறுப்பிள்ளை |
| 012). | கி/ப/501 | திரு. சிவஞானம் சிவயோகநாதன் |
| 013). | கி/ப/512 | திருமதி. இராசலட்சுமி செல்வரத்தினம் |
| 014). | கி/ப/515 | திரு. வீரகத்தி இராசரத்தினம் |
| 015). | கி/ப/559 | திருமதி. சின்னாச்சி கிட்டினன் |
| 016). | கி/ப/694 | திருமதி. இந்திராணி கந்தசாமி |

## செய்திப் படங்கள்



குண்டுவெடிப்பினால் சேதமடைந்த மூன்றுமாடி வீடு ஒன்றில் பாகிஸ்தானியப் பொலீஸார் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இஸ்லாமியத் தீவிரவாதக் குழு உறுப்பினர் குண்டுதயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது இந்த அனர்த்தம் இடம்பெற்றது.



அமெரிக்காவின் – நியூ ஜேசியில் உள்ள சமஷ்டி விமான நிர்வாக அமைப்பின் பயிற்சி நிலையத்தில் விமானக் கடத்தல் முறியடிப்பு தொடர்பான பயிற்சியின்போது...



ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவிய தென்கொரிய எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் லீ கோய் – ஷாங், செய்தியாளர் மாநாட்டில் கண்கலங்கும் காட்சி.



காஸாப் பகுதியில் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 15 வயது பலஸ்தீனச் சிறுவனின் சடலம் நண்பர்களால் காவிச்செல்லப்படுகிறது.

# ஈராக்கைத் தொடர்ந்து சோதிக்க அமெரிக்க ஜனாதிபதி உத்தரவு!

## புலனாய்வுத் துறையினரும் அனுப்பப்படுவர்

(வொஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி - ஈராக்கின் ஆயுத விபரம் தொடர்பான அறிக்கை வெளியானதன் பின்பு முதற்தடவையாக பொதுக் கருத்தொன்றினை வெளியிட்டுள்ளார். புஷ், தனது அறிக்கையில் - ஈராக் தொடர்ந்தும் அழிவுதரும் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாகவும், ஆயுதப் பரிசோதகர்கள் தொடர்ந்தும் ஈராக்கில் சோதனை நடத்த வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

அதேவேளை - வெளிவிவகாரச் செயலாளர் கொலின் பவல் கருத்து வெளியிடுகையில் - இராணுவ நடவடிக்கைக்கான இறுதிச் சந்தர்ப்பத்தினைக் கைநழுவவிடுவதாகக் கூறியுள்ளார்.

ஈராக் தன்னிடம் அழிவு தரும் ஆயுதங்கள் இல்லை என்பதனை கூறியபோதும், அமெரிக்கா அதனை நம்பத்தயாராக இருக்கவில்லை. எனினும், ஐ.நா.வின் ஆயுதப் பரிசோதகர்கள், ஈராக்கிற்கு ஆயுதப் பரிசோதனைக்காகச் சென்றமை அமெரிக்காவிற்கு ஆறுதல் அளிப்பதாக மேற்கு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



ஆயுதப் பரிசோதகர்கள்

உலகவலம்

# பொது இடங்களுக்கு அகதிகள்; சுவிஸ் அரசாங்கம் தடைவிதிப்பு!

(பேர்ன்)

புகலிடத் தஞ்சம் கோருவோரை நகரின் பொது இடங்களில் அனுமதிப்பதற்கு சுவிஸ்லாந்து அரசாங்கம் தடைவித்துள்ளது. சுவிஸ்லாந்தின் சிறிய நகரங்களிலுள்ள பொது இடங்களான பூங்கா போன்ற இடங்களில் அவர்கள் பிரவேசிப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - சுவிஸின் பெரிய நகரங்கள் மிகவும் திடமான வரையறுக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை, புகலிடத் தஞ்சங்கோருவோரைக் கையாள்வது தொடர்பில் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இந்த வகையில் - பொதுவான இடங்களான பூங்காக்கள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், நீச்சல் தடாகங்கள் என்பவற்றுக்குள், புகலிடம் கோருவோர் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு - புகலிடத் தஞ்சங் கோருபவர்கள்தான், சுவிஸ்லாந்தில் போதைப் பொருட்களைப் பாவிப்பதாகவும், சுவிஸ் நாட்டின் சட்டங்களை மதியாது, குழப்பவாதிகளாக செயற்படுவதாகவும் அந்த நாட்டு மக்களிடையே பொதுவான கருத்து நிலவுவது குறிப்பிடத்தக்கது.



சுவிஸில் அகதிப் பெண்

# அகதிகளை அவுஸ்திரேலிய இராணுவம் தாக்குவதாக மனிதவுரிமைக் குழு சாடல்

(சிட்னி)

அவுஸ்ரேலியாவிற்குள் புகலிடம் தேடிவரும் பசுபிக் பிராந்திய நாடுகளின் அகதிகள் தங்கியிருக்கும் தடுப்பு முகாம்களை, நாட்டுக்கு வெளியே அமைப்பதன் மூலம் அகதிகளின் மனித உரிமைகளை அவுஸ்ரேலிய இராணுவம் மீறுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியக் கடற்படையினரும், இராணுவத்தினரும் - உடல்ரீதியாக, உளரீதியாக, வாய்மொழிரீதியாக அகதிகளைச் சித்திரவதை செய்வதாக - அவுஸ்திரேலிய மனித உரிமைகளுக்கான அமைப்பொன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

மேற்படி மனித உரிமைகள் குழுவானது, அவுஸ்ரேலிய இராணுவத்தினர் செய்யும் சித்திரவதைகள் பற்றி, முழு அளவிலான விசாரணையைச் செய்யுமாறு அவுஸ்திரேலிய அரசைக் கோரியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியோர்-தம்மை அவுஸதிரேலிய இராணுவத்தினர் அடிப்பதாக முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து - எதிர்க்கட்சியினரான தொழிற்கட்சியினர், மேற்படி விவகாரம் தொடர்பாக தேசியரீதியில் விவாதம் ஒன் றினை ஆரம்பிக்குமாறும் கோரியுள்ளனர். அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோருவதில் ஆப்கானிஸ்தானியரே கூடுதலான எண்ணிக்கையானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



அவுஸ்திரேலியாவில் உள்ள ஒதுக்குப்புற அகதிமுகாம் ஒன்று.

## யூதர்களை அகற்ற இஸ்ரேல் படை நடவடிக்கை

(ஹெப்ரோன்)

மேற்குக்கரை நகரமான ஹெப்ரோனில் உள்ள யூதக் குடியேற்றங்களில், பலஸ்தீன நகரங்களுக்கு அருகிலுள்ளவற்றில் இருந்து, யூத மக்களை வெளியேற்ற இஸ்ரேல் இராணுவம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்த மாதம் பலஸ்தீனப் போராளிகளின் அதிரடித்தாக்குதலினால் பன்னிரண்டு யூத மக்கள் கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து, எல்லைப்புற யூதக் குடியேற்றங்களில் இருந்து யூத மக்கள் வெளியேறி வருகின்றனர்.

இதேவேளை - இஸ்ரேலியப் பாதுகாப்புத் திணைக்களம் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், மேற்படி குடியேற்றங்கள் சட்டபூர்வமற்ற முறையில் தனியாருக்குச் சொந்தமான நிலப்பரப்பில் இருந்ததனாலேயே, யூதக்குடியேற்றங்கள் கலைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரை 200 யூதக் குடியேற்றக்காரர்கள் குடியேற்றங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

# தீவிரவாதிகளை முறியடித்ததாக உகண்டா இராணுவம் அறிவிப்பு

(கம்பாலா)

போராளிகளைத் தாம் தோற்கடித்துள்ளதாக உகண்டா இராணுவத்தினர் கூறியுள்ளனர். இந்த வருடத்தின் ஆரம்பத்தில் போராளிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.



தாக்குதலில் உகண்டா இராணுவம்

இவ்வருடத்தில் 1500 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - உகண்டா இராணுவத் தளபதி - இந்த வருடத்திற்குள் போராளிகளைத் அழிக்காதுவிடின், தான் பதவியை இராஜினாமாச் செய்வதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

வடக்கு உகண்டாவில் 1987 முதல் ஜனாதிபதி யூவோவிசியை வெளியகற்றியதில் இருந்து போராளிகள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போது - பாதுகாப்பற்ற சூழ்நிலை என்று எந்தவொரு உகண்டாப் பிரதேசமும் இல்லையென இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

வட உகண்டாவில் 90 வீதமான பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும், ஒரு சிறு பகுதியே ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளுக்குள் இருப்பதாகவும் இராணுவத்தளபதி கூறியுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அத்தியாவசியத் தேவைகள் குறித்து பிரதேச செயலகங்கள் விபரம் சேகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான- அத்தியாவசிய, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக, ஒன்றிணைக்கப்பட்ட விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக- யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் அத்தியாவசியத் தேவைகள் குறித்து மதிப்பீடு செய்யப்பட இருக்கிறது. மேற்படி, மதிப்பீட்டுப் பணிகளை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்படி மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளன. இதற்கான பணிப்புரைகளை, யாழ்.செயலகம்- அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

எதிர்காலத்தில் விரைவாக நடைமுறைப்படுத்தவிருக்கும் ஒன்றிணைக்கப்பட்ட திட்டத்தின்படி நிதி உதவிகளை வழங்கல், மற்றும் உடனடியாகத் தேவைபபடும் அத்தியாவசியத் தேவைகள் குறித்தும் பிரதேச செயலகங்கள் தயாராகுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (க)

# தாதியின் அசிரத்தை; கர்ப்பிணி மரணம்!

## லேடி ரிஜ்வே மருத்துவமனையில்

(கொழும்பு)

கொழும்பு லேடி ரிஜ்வே மருத்துவ மனையில், மருத்துவத் தாதியின் அசிரத்தையால், கர்ப்பிணித் தாய் ஒருவர் பரிதாபகரமான முறையில் மரணித்துள்ளார்.

கர்ப்பிணித் தாயை பிரசவ அறைக்கு கொண்டு செல்லும் போது, ஸ்ரெச்சர் சுவருடன் மோதியதால் மேற்படி கர்ப்பிணித்தாய் ஸ்ரெச்சரிலிருந்து தவறி விழுந்து மரணமடைந்தார்.

# விமானப் படைக்கு புதிதாக பயிற்சி விமானங்கள்

இலங்கை வான்படை, விமானிகளின் பயிற்சிக்காக கிபிர் மற்றும் கே-8 ரகப் பயிற்சி விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளது.

இஸ்ரேலிடம் இருந்து ஒரு கிபிர் விமானத்தையும், சீனாவிடமிருந்து கே-8 பயிற்சி விமானங்கள் மூன்றையும் கொள்வனவு செய்ய வான்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ் விமானங்கள் விரைவில் கொழும்பு வந்து சேரும் எனத் தெரியவருகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின்போது- இழக்கப்பட்ட கே-8 பயிற்சி விமானங்களுக்குப் பதிலாகவும், அண்மையில் குருந்துவத்தைப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கிய கிபிர் பயிற்சி விமானத்துக்குப் பதிலாகவுமே, வான்படை இந்தப் புதிய பயிற்சி விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புறக்கோட்டையில் நடந்த தீ விபத்து புலிகள் தயாராவதைக் காட்டுகிறது

## பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்

ஐந்துலாம்படிச் சந்தியில் இடம்பெற்ற தீ விபத்து மூலம் விடுதலைப் புலிகள் மற்றுமொரு தாக்குதலுக்குத் தயாராவது புலப்படுத்தப்படுகிறது.

- இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார். நேற்று நடந்த செய்தியாளர்கள் மாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## உவர் நில ஆராய்வு

யாழ்.மாவட்டத்தில் உள்ள உவர் நிலங்கள் குறித்த விபரம் திரட்டப்பட்டு வருகின்றது.

கடல்நீர் உட்புகுந்தமையாலும் ஏனைய காரணங்களாலும் குடாநாட்டில் பல பகுதிகளிலும் ஆங்காங்கே உவர் நிலங்கள் பயன்பாடு எதுவுமின்றிக் காணப்படுவதையடுத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது

## நோர்வே..

தேரர் தலைமையில் செல்லும் பௌத்த பிக்குகளின் பிரதிநி திகள், இந்த மகஜரைக் கையளிப் பதுடன், ஜனாதிபதியுடன் இது தொடர்பாகப் பேசவும் உள்ளனர் என இம்முன்னணியின் வட்டா ரங்கள் தெரிவித்தன.

## நெடுந்தீவில் மக்கள் மீது..

இதன் காரணமாக பீதியடைந்த மக்கள் சிதறி ஓடினர். இவ்வாறு சிதறி ஓடியோர் மீது- சிவில் உடையில் இருந்த பொலிஸாரும், கடற்படையினரும் தொடர்ந்து விரட்டி விரட்டித் தாக்குதல் நடத்தினர்.

உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக அங்கு கட்டப்பட்டிருந்த பதாகையை அவர்கள் அறுத்தெறிந்தனர். மின்விளக்குகள் அடித்து நொருக்கப்பட்டன.

இந்தத் தாக்குதலில் சிதறி ஓடிய மக்களின் துவிச்சக்கர வண்டிகளும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் இருந்த கதிரைகள் சிலவும் பொலிஸாரால் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தத் தாக்குதலின் போது ஜே.அல்வீனஸ் என்பவர் தலையில் படுகாயமடைந்ததுடன், பலர் சிறு காயங்களுக்கும் உள்ளாகினர்.

இவற்றைத் தொடர்ந்து பெருமளவில் மக்கள் அப்பகுதியில் மீண்டும் ஒன்றுகூடியதையடுத்து பொலிஸ் மற்றும் கடற்படையினர் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர்.

தொடர்ந்து மக்கள் தமது போராட்டத்தினை நடத்தி வருகின்றனர்.

(113)

## மீள்...

மாலையில் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுவின் கூட்டத்தின் போது மீள்குடியேற்றப் பிரதேசம் ஒன்றைப் பிரகடனம் செய்வதாக அரசதரப்பு ஒப்புக்கொண்டிருந்தது. இதற்காக இன்றுவரை காலவரையறையும் வழங்கப்பட்டிருந்தது.

தற்போதைய நிலையில் குடாநாட்டின் எப்பகுதியில் மேற்படி மீள் குடியேற்றப்பிரதேசத்தை தெரிவு செய்வது என்பது குறித்தும், எத்தனை சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை இவ்வாறு பிரகடனம் செய்வது என்பது குறித்தும்- படை அதிகாரிகள் மத்தியில் தொடர்ச்சியான கருத்துப்பரிமாற்றங்கள் நிகழ்ந்து வருவதாகவும் எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## தமிழகத்திலிருந்து...

மீன்பிடிப் படகு இவர்களை மன்னாருக்கு அருகிலுள்ள முதலாவது மணற்திட்டியில் இறக்கிவிட்டுச் சென்றதாகவும்,

பின்னர் -உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் தாம் உறுமலை வந்தடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். தலைமன்னார் பொலிஸாரிடம் இவர்கள் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுப் பின்னர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு நேற்று மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

## பயங்கரவாத...

ளின் மிக அடிப்படையான விடயங்கள் பற்றியே இன்று கலந்துரையாடப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் அமைதி தொலைதூரம் போல் தெரிந்தது.

ஆனால், இன்று நிலை முன்னேற்றம் கண்டுவிட்டது. மனித உரிமை மீறல்களும் இன்று குறைந்துவிட்டன. ஆனாலும் - இன்றும் நிறைய எட்டப்பட வேண்டும். யுத்தத்தின் பாதிப்புக்கள் களையப் பட வேண்டும்.

மனித உரிமைகளும் அமைதியும் ஒன்றோடொன்று இணைந்தவை. கடந்த காலங்களில் அரச நிறுவனங்களின் மனித உரிமை மீறல்கள், இரு பிரதான இனங்களிடையேயும் பெரும் பிளவை ஏற்படுத்திவிட்டன.

வடக்கு கிழக்கில் வாழும் மக்கள்- நிர்வாக, பொருளாதார, கல்வி, சமூகரீதியாக ஒடுக்கு முறைக்காளானார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்காலிகமாகவே கொண்டுவரப்பட்டாலும் 1979 க்குப் பின் அது நிரந்தரமாக்கப்பட்டுவிட்டது.

இனிவரும் காலத்திலாவது- தற்போதைய யுத்தமற்ற சூழ்நிலை முன்னேற்றமடைந்து -

அனைத்து மக்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும், அங்கீகரிக்கும் நிலை அமைதியுடன் உருவாக நாம் நம்பிக்கை கொள்வோம் என்றும் நீதிபதி விக்கினேஸ்வரன் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

## புலிகளின்...

இலங்கை அரசாங்கம் எவ்வாறு கருவிகளை வழங்க முடியும் என்று கேள்வி எழுப்பிய சரத் அமுனுகம, இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவில் புலிகளின் வானொலி பதிவு செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

அவ்வாறு வழங்கப்பட்ட தொலைத தொடர்புக் கருவிகள் எத்தகைய ரகத்தைச் சேர்ந்தவை என்பது பற்றி எவருக்கும் தெரியாது. அது தொடர்பான அதிகாரிகளிடம் நாம் தொடர்பு கொண்டபோது-

புலிகளுக்கு வானொலிக் கருவி அனுப்பி வைக்கப்பட்டமை தமக்குத் தெரியாது என அவர்கள் தெரிவித்ததாகவும் சரத் அமுனுகம கூறினார் .

எனவேதான், நோர்வேயின் உதவியுடன் அனுப்பப்பட்ட வானொலிக் கருவிகளை ராணுவத் தேவைக்கும் இலங்கை ராணுவத்தின் ரகசியங்களை அறிவதற்கும் புலிகள் பயன்படுத்துவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை என்றும் தெரிவித்த அவர்,

தேசிய திட்டங்களையும் ரகசியங்களையும் விடுதலைப்புலிகளுக்கு தெரியப்படுத்தும் ஓர் நடவடிக்கைதான் வானொலிக்கருவிகளை அரசாங்கம் அங்கு அனுப்பி வைத்ததன் வெளிப்பாடு என்றும் கூறினார். அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டித்து எதிர்ப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சரத் அமுனுகம தெரிவித்தார்.



இலண்டனிலிருந்து வந்த அங்குள்ள ஈழத்தமிழர்களின் அணிக்கும், கிளிநொச்சி மாவட்ட அணிக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டி நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. இப்போட்டியில் கிளிநொச்சி அணி 3:1 கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## ஐந்துலாம்படி தீ விபத்து

# கடையின் உரிமையாளர் தலைமறைவு என சந்தேகம்

(கொழும்பு)

கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் இடம்பெற்ற தீ விபத்துக்குள்ளான கடை உரிமையாளர் தலைமறைவாகியுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக புறக்கோட்டைப் பொலிஸார் நடத்தி வந்த விசாரணை, குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு தற்பொழுது பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இரசாயனப் பகுப்பாய்வாளர்களின் அறிக்கை, அடுத்த வாரம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. மேற்படி தீ விபத்தில் மொத்தமாக 2 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, 17 கடை உரிமையாளர்கள் இதுவரை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

# இந்தியா பங்குபற்றமாட்டாதென யு.என்.எச்.சி.ஆருக்குத் தெரிவிப்பு

கிளிநொச்சியில் நேற்று நடைபெறுவதாக இருந்த, தமிழகத்திலுள்ள அகதிகளை மீளவும் தாயகத்திற்கு அழைத்து வருவது தொடர்பான மாநாட்டில் இந்தியா பங்குபற்றாது என, யூ.என்.எச்.சி.ஆருக்கு முன் கூட்டியே தெரியப்படுத்தப்பட்டதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த இந்திய அதிகாரி, தாம் யூ.என்.எச்.சி.ஆருடன்- தமிழகத்திலுள்ள அகதிகள் குறித்து தொடர்ச்சியான நேரடித் தொடர்புகளை வைத்துருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை- இந்தக் கூட்டம் தொடர்பாக இந்தியா, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளின் தூதுவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், இதில் - ஜப்பானில் இருந்து விசேட தூதுவர் யசுகி அகாஷி வருவார் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் யு.என்.எச்.சி.ஆர்.பிரதிநிதி ஒருவர் தெரிவித் தார்.

# கிளிநொச்சி வெள்ளத்தினால் ஆயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழையினால் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக கிளிநொச்சி அரச செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக கடும் மழை பெய்தது.

இதனால் 1850 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், இவர்களுக்கு - ஏற்கனவே, மூன்று நாட்களுக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(லி)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.43 | 96.87 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.13 | 155.45 |
| 1 யூரோ | 98.61 | 93.63 |
| 1 சுவிஸ் பிராங் | 67.29 | 68.30 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 54.28 | 55.10 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 22.80 | 22.80 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.